வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 21.08.2024 புதன்கிழமை | இதழ் : 234 | பக்கங்கள் : 12

# 'அறகலய'வின் சூத்திரதாரிகளில் ரணிலும் ஒருவரே!

## நாமல் ராஜபக்ஷ பகிரங்கம்

கொழும்பு, ஒகஸ்ட் 21

**அறகலயவை தோற் றுவித்தவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கொழும்பு மயூராபதி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் வழிபட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'சிஸ்டம் சேஞ்ச்' என்ற முறைமை மாற்றத்தைக் கோரிப் போராடிய இளைஞர்கள் இன்னும் வீதிகளிலேயே இருக்கிறார்கள். அறகலயவில் ஈடுபட்ட ஒரு பிரிவினர் ரணில் விக்ரமசிங்கவு டன் தொடர்பு பட்டிருக்கிறார்கள்.

அவரின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது, அவரும் அறகலயவை தோற்றுவித்த சூத்திரதாரிகளில் ஒருவர் எனவே நிரூபணமாகிறது.

போராட்டத்தில் ஈடுபட்ட 11

கொக்குத்தொடுவாய் போராட்டம்:

# மனிதப் புதைகுழியின் மேலே கதறி அழுது நீதி கோரிய மக்கள்!

முல்லைத்தீவு, ஒக. 21

கொக்குத்தொடுவாயில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மனிதப் புதைகுழியின்மீது விழுந்து கண்ணீர் விட்டு கதறி அழுது தமக்கான நீதியை கோரினார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 11



## நாம் எந்த அரசாங்கத்துடனும் இணைந்து பணியாற்ற தயார்!

### இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 21

இலங்கை மக்கள் தெரிவுசெய்யும் எந்த அரசாங்கத்துடனும் இணைந்து பணியாற்றுவதற்கு இந்தியா தயார் என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

கண்டியில் பௌத்தமத தலைவர்களுடனான சந்திப் பின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார். 11

## திராவிடர் கழக தலைவர் வீரமணி யாழ். வருகிறார்!

யாழ்ப்பாணம், ஒக. 21

முதலாவது தமிழ் எதிர்க்கட்சி தலைவரான அ. அமிர்தலிங்கத்தின் 97ஆவது பிறந்தநாள் நினைவுப்பேருரை ஆற்றுவதற்காக தமிழ்நாட்டின் திராவிடர் கழக தலைவர் கி. வீரமணி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

அமிர்தலிங்கத்தின் பிறந்தநாள் நினைவுப் பேருரை நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேம்படி வீதியில் அமைந்துள்ள ரிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அப்பாப்பிள்ளை 11



## வேலுகுமார், திகாம்பரம் எம். பிக்கள் கைகலப்பு!

கொழும்பு, ஒக. 21

பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், திகாம்பரம் ஆகியோர் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கைகலப்பில் ஈடுபட்டனர்.

கொழும்பை தளமாகக்கொண்டு நேற்றிரவு ஒளி பரப்பான தொலைக்காட்சி அலைவரிசையின் விவாத நிகழ்வில் வேலுகுமார், பழனி திகாம்பரம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

ஒரு கட்டத்தில் இவருக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து, இருவரும் கைகலப்பில் ஈடுபட்டனர். இருவரையும் 11

# மாகாண சபை தேர்தல் சட்ட மூலம் இன்று சபையில் சமர்ப்பிக்கப்படும்

## செப். 3இல் நிறைவேற்ற தீர்மானம்

கொழும்பு, ஒக. 16

இறுதி செய்யப்பட்ட மாகாண சபைகள் தேர்தல் சட்ட மூலம் இன்று புதன்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இன்றைய தினம் இந்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டாலும் எதிர்வரும் செப். 3ஆம் திகதியே விவாதம் நடைபெற்று சட்டமாக அங்கீகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே, மாகாண சபைகள் தேர்தல் சட்டமூலத்தின் நகலை நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற சட்டவாக்கல் 11

## ரணிலுக்கு ஆதரவளிக்கக் கோரி ரூ. 100 கோடி பேரம்பேசப்பட்டது!

### பகிரங்கப்படுத்தினார் மரிக்கார் எம். பி.

கொழும்பு, ஒக. 21

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி ஜனாதிபதிக்கு ஆதரவளிக்குமாறு கட்சியின் உறுப்பினர் ஒருவரிடம் நூறு கோடி ரூபாய் பேரம் பேசப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார். 11

## நிறைவேற்றதிகாரம் நீக்கப்படவேகூடாது!

### சரத் பொன்சேகா கூறுகிறார்

கொழும்பு, ஒக. 21

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்படக்கூடாது. அந்தப் பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உள்ள திருடர்கள் 11

வெல்க தமிழ்
ஜனாதிபதித் தேர்தல் – 2024
"பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிஜ மென்று சங்கே முழங்கு"

தமிழ்ப் பொதுவேட்பாளர்
தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு பா.அரியநேத்திரன்
(கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அமெரிக்காவின் பிரபல எழுத்தாளரான மார்க் ட்வைன் இளைஞராக இருந்தபோது ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

அங்கு பணியில் சேர்ந்த ஆறு மாதம் கழிந்த பின், அந்த நிறுவனத்தின் முகாமையாளர் அவரை அழைத்து வேலையிலிருந்து நிறுத்துவதாகக் கூறினார்.

காரணம் என்னவென்று வினவிய போது, முகாமையாளர் சொன்னார், "நீ ஒரு சரியான சோம்பேறி. நீ இந்த நிறுவனத்துக்கு லாயக்கில்லை."

மார்க் ட்வைன் உடனே சொன்னார், "நீங்கள்தான் சரியான சோம்பேறி" என்று.

முகாமையாளருக்கு கோபம் வந்தது. தன்னை ஏன் அவ்வாறு கூறினார் என்று கேட்க, ட்வைன் சொன்னார்:

"நான் ஒரு சோம்பேறி என்பதைக் கண்டுபிடிக்க உங்களுக்கு ஆறு மாதம் ஆகியிருக்கிறதே? நீங்கள் ஒரு சோம்பேறி என்பதை நான் வேலையில் சேர்ந்த அன்றே தெரிந்து கொண்டேன்."

இந்தக் கதைக்கும் இனி எழுதப் போகின்ற விடயத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

இடையிடையே இப்படி ஒரு கதையுடன் தொடங்காவிட்டால் என்ன கதையைக் காணவில்லை என்று சில வாசகர்கள் குறைப்பட்டுக்கொள்வதால் ஒரு கதையைத் தந்திருக்கின்றேன்.

அண்மையில், கொழும்பில் சில முக்கிய அரசியல் பிரமுகர்களை சந்தித்தபோது அவர்கள் தெரிவித்த கருத்து ஒன்றை நேற்றைய பத்தியில் தந்திருந்தேன்.

அந்தச் சந்திப்பில், தெற்கு தேர்தலில் களநிலவரம் எப்படியிருக்கின்றது என்பதை அறிய அவர்களுடன் பேசிய போது கிடைத்த தகவல்களை இன்று உங்களோடு பகிர்ந்துகொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

அவர்களில் ஒருவர், தேர்தல் காலங்களில் கருத்துக்கணிப்புகளை நடத்துவதில் அனுபவமுள்ளவர். அவர் எப்போது கண்டாலும் ஜே. வி. பியே முன்னணியில் இருக்கின்றது என்று சொல்வார். அப்போது போட்டி அநுரவுக்கும் சஜித் பிரேமதாஸவுக்கும்தான் என்று அவர் சொல்கின்றபோது, ஆச்சரியமாக இருக்கும். இதுகாலம் வரை மூன்று வீத வாக்குகளுடன் இருந்த ஒரு கட்சி திடீரென்று பத்து மடங்கு அதிக ஆதரவைப் பெறுவது சாத்தியமா என்று எனக்குள் கேட்டுக்கொண்டதும் உண்டு.

அவரிடம் இப்போது நிலைமை எப்படி? என்று கேட்டபோது, அவர் சொன்னது மிகச்சுருக்கமாக இருந்தது. முதலாம் இடத்துக்கு "அவர்கள்" இருவருக்குமிடையே போட்டி. மூன்றாம் இடத்துக்கு "இவர்கள்" இருவருக்குமிடையே போட்டி என்றார்.

அது எப்படி முதலாமிடத்தில் இருந்தவர், மூன்றாமிடத்துக்குக்கூட இப்போது போட்டிபோட வேண்டியிருக்கின்றது என்று அவரிடமே கேட்டேன்.

அவர் சொன்னார், அவர்கள்தான் பிரசாரம் தொடங்கியதும் ஒவ்வொரு நாளும் ஒரு குண்டைப் போட்டு தங்களைத் தாங்களே கெடுத்துக் கொள்கின்றார்களே என்று.

கோட்டாபய ஆட்சி அமைத்ததும் அவர் முதலில் செய்தது, "வற்" (பெறுமதிசேர் வரி) வரியை இல்லாமல் செய்தது. சிறிய மற்றும் நடுத்தர முதலாளிகளின் ஆதரவைப் பெறுவதற்காக அந்த வரியை இரத்துச் செய்வேன் என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர் அதனை உறுதியளிக்கப்போய், ஆட்சிக்கு வந்ததும் முதல் வேலையாக அதனை அவர் இரத்து செய்தார்.

ஒவ்வொரு பொருட்களின் மீதும் விதிக்கப்படும் இந்த வரியை கோட்டாபய இரத்துச் செய்தாலும் பொருட்களின் மேல் இருந்த வரி இரத்துச் செய்யப்பட்டபோதும் அந்தப் பொருட்களின் விலை குறையவில்லை. இதனால் இலாபம் அடைந்தவர்கள் என்னவோ முதலாளிமார்தான்.

ஆனால், நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது, கோட்டாபய வரியை இரத்துச் செய்ததால்தான் நாடு இந்த நெருக்கடியை எதிர்கொண்டது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும், ஜே. வி. பியும் குற்றம்சாட்டின. ஐக்கிய மக்கள் சக்தியின் நிழல் நிதி அமைச்சரான கலாநிதி ஹர்ஷ டி சில்வாவும் ஜே. வி. பியின் நிழல் நிதி அமைச்சரான சுனில் ஹந்துநெத்தியும் மாறிமாறி இதையே கூறிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், ஜே. வி. பியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய அதன் பிரதித் தலைவரான விஜித ஹேரத், தாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதும் பாராளுமன்றம் மறுநாளே கலைக்கப்படும் என்றும் புதிய பாராளுமன்றம் அமைந்தது தமது கட்சி ஆட்சியில் அமரும்போது வற் வரியை இரத்துச் செய்வோம் என்றும் அறிவித்திருக்கிறார். கோட்டா இதனைச் செய்ததால்தான் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது என்றவர்கள், தாம் ஆட்சிக்கு வந்தாலும் இரத்துச் செய்வோம் என்கின்றனர்.

அவர் இவ்வாறு அறிவித்த சில நாட்களிலேயே, ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான ஹரினி அமரசிங்க, தாம் ஆட்சியில் அமர்ந்ததும், கண்டி தலதா மாளிகையில் நடைபெறும் கண்டி பெரஹராவையே தடை செய்வோம் என்று அறிவித்திருக்கிறார்.

இப்படியே போனால், மீண்டும் பழைய இடத்துக்கு வந்துவிடுவார்களோ தெரியவில்லை என்றார் அவர்.

அவரோ தற்போதைய ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மீது எப்போதும் விமர்சனத்தை முன் வைக்கின்ற ஒருவர். ஆனால், அவர் சொன்னார், இவர்கள் இழக்கின்ற ஒவ்வொரு வாக்கையும் அவர் பெற்றுக் கொண்டிருக்கிறார் என்று.

ராஜபக்ஷக்களின் பக்கத்தில் என்ன நடக்கின்றது என்று கேட்டேன். தமது கட்சியை விட்டு வெளியேறி, ரணிலுடன் இணைந்துகொண்ட தொண்ணூறுக்கும் அதிகமான எம். பிக்களை தனித்தனியாக அழைத்து ஒவ்வொருவராக பேசிக்கொண்டிருக்கிறாராம் பசில் ராஜபக்ஷ. ஒவ்வொருவருடனும் நீண்டநேரம் பேசும் அவர், ஒவ்வொருவருக்கும் தாம் தனிப்பட்ட ரீதியில் செய்த உதவிகளை எல்லாம் ஞாபகப் படுத்தி, தமது பக்கத்துக்கு மீண்டும் அழைப்பதற்காக முழு நேரத்தையும் செலவிடுகிறாராம். தேர்தல் முடிவடைவதற்கு முன்னர் பத்துப் பேராவது அந்தப் பக்கம் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றார் அந்தப் பிரமுகர்.

- ஊர்க்குருவி.

## நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறிலசிறீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று புதன்கிழமை அராலி கிழக்கு மலையாளங்காட்டு ஐயனார் குழுவினரின் பஜனை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

மயிலணி முத்துமாரி அம்மன் திருக்கோவில் பிரதம குருக்கள் சிவசிறீ நா. சிவசங்கரக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ. தயாரூபன் பிரதம அதிதியாகவும் பேராதனை பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் கலாநிதி ஏ. அனுசாந்தன் சிறப்பு அதிதியாகவும் பங்கேற்பர்.

இதில், சைவ திருத்தொண்டர் சபை அறநெறி பாடசாலை, நெல்லை முருகன் அறநெறி பாடசாலை, உச்சில் அம்மன் அறநெறி பாடசாலை, அம்பாள் சமேத கல்யாண சுந்தரர் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக அனுராகம் கவின்கலை நிலையம் வழங்கும் குழு இசை நிகழ்வும் நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

## ரணில் உண்மையை மறைத்து நரித்தனமாகப் பேசுகின்றார்!

மனோ கணேசன் எம். பி.



கொழும்பு, ஓக. 21

இந்திய அரசு நிதி உதவி செய்தமையால்தான் பெற்றோல், உணவு, எரிவாயு, மருந்து வரிசைகள் மற்றும் மின்வெட்டு, உர தட்டுபாடு ஆகியவற்றில் இருந்து இலங்கை காப்பாற்றப்பட்ட உண்மையை மறைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நரித்தனமாகப் பேசி வருகிறார் என்று பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

மாவனெல்லை, ருவன்வெல்ல ஆகிய இடங்களில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் பிரசார கூட்டங்களில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"இலங்கைக்கு இந்திய அரசின் தொடர் கடன் நிதி உதவி வழங்க வேண்டும் என இந்திய அரசு, 2021 டிசெம்பர் மாதம் கொள்கைரீதியாக முடிவு எடுத்தது. இவை ரணில் ஆட்சிக்கு வர முன்னர் தீர்மானிக்கப்பட்டவை.

அதன் பிறகு, 2022 மேயில் பிரதமராகவும், ஜூலையில் ஜனாதிபதியாகவும் ரணில் பதவிகளை ஏற்றார். ரணில் பதவிக்கு வந்து இவற்றை பயன்படுத்தினார். ரணில் பதவிக்கு வந்து சுயமுயற்சியால் இவற்றைக் கொண்டுவரவில்லை. இந்த உதவிகள் இந்திய அரசு, இலங்கை மக்களுக்கு - நாட்டுக்கு வழங்கிய பெரும் உதவிகளாகும்.

இதனாலேயே, இந்நாட்டில் அத்தியாவசிய பொருள் வரிசைகள் நின்றன. மின் வெட்டு நின்றது. விவசாயத்துக்கு தேவையான உரம்கூட ஓமான் நாட்டில் இருந்து இந்திய கடனுதவி மூலம் பெற இந்திய அரசு அனுமதி தந்தது. இதுதான் உண்மை. இதை மறுக்க முடியுமா? உண்மை தெரியாமல் பேசித் திரிபவர்களுக்கும் நான் சவால் விடுக்கிறேன்." - என்றார். (ஐ)

## கோண்டாவில் மகா கணபதி ஆலயத்தில் தீ மிதிப்பு விழா!

பெருமளவு பக்தர்கள் பங்கேற்பு



யாழ்ப்பாணம், ஓக. 21

கோண்டாவில் மேற்கு மகா கணபதி பிள்ளையார் கோயிலில் தீ மிதிப்பு திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த 09ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று முன்தினம் தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைந்தது. பெருந்திருவிழா நிறைவு நாளில் பல வருடங்களாக தீ மிதிப்புத் திருவிழா நடைபெறுவது வழமை.

இந்தத் திருவிழா நேற்று முன்தினம் வெகு சிறப்பாக பெருமளவு பக்தர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. இதில், பெருமளவு பக்தர்கள் தீ மிதித்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
21.08.2024 புதன்கிழமை
குரோதி வருடம், ஆவணி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சஜித்தின் புதிய அரசியல் யாப்பு!

சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்றவுடன் புதிய அரசியல் யாப்பு ஒன்று உருவாக்கப்படும் என்று அந்தக் கட்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஜித் பெரேரா தெரிவித்திருக்கின்றார். தான் ஆட்சிக்கு வந்தால் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டிருந்தார். ஆனால், தற்போது அவரின் கட்சியை சேர்ந்தவர் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசியிருக்கின்றார். தேர்தல் பிரசாரத்தின்போதே வாக்குறுதியில் தடுமாற்றங்கள் ஏற்படுகின்றன. அவ்வாறாயின், ஒருவேளை சஜித் ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும்?

பிரதான வேட்பாளர்களில் யாரோ ஒருவர் ஆட்சிக்கு வருவார். அது ஒருபுறமிருக்கட்டும். ஆனால், புதிய அரசியல் யாப்புக் கதையை எவ்வாறு நோக்குவது? ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்புக் கதை அதிகம் பேசப்பட்டது. யாப்பு வந்துவிடப் போவதான ஒரு மாயையும் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், என்ன நடந்தது?

முதலில் புதிய அரசியல் யாப்பு பற்றி பேசுவதே அடிப்படையில் ஓர் அரசியல் கற்றுக்குட்டித்தனமாகும். இலங்கைத் தீவில் புதிய அரசியல் யாப்பு வரமுடியும். ஆனால், அந்த யாப்பின் ஊடாக தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு உறுதிப்படுத்தப்படும் என்று என்று எண்ணினால் அவர்களை விடவும் அரசியல் விடலைகள் வேறு யாரும் இருக்க முடியாது. இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் ஒரு விடயத்தில் மிகவும் உறுதியாக இருக்கின்றனர். அதாவது, இலங்கைத் தீவு எப்போதுமே, ஓர் ஒற்றையாட்சி கட்டமைப்பின் கீழ், ஒரு பௌத்த - சிங்கள நாடாக இருக்க வேண்டும். அதற்குக் குந்தகமான எந்தவொரு விடயத்தையும் அனுமதிக்கக்கூடாது - அதனை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்பதில் பௌத்த மத பீடங்கள் உறுதியானதும் - இறுக்கமானதுமான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன.

இலங்கையின் ஒற்றையாட்சி கட்டமைப்புத்தான் பௌத்த மதபீடங்களுக்கும் இராணுவத்துக்குமான பாதுகாப்பாகும். ஒற்றையாட்சி நீக்கப்பட்டால் இருவரும் அவர்கள் இதுவரை அனுபவித்து வந்த அதிகாரங்கள் அனைத்தையும் ஒரேநாளில் இழந்துவிடுவர். இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால் எந்தவொரு தென்னிலங்கை ஆட்சியாளரும் தமிழ் மக்களுக்கான சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை உறுதிப்படுத்தும் வகையிலான புதிய அரசியல் யாப்பு தொடர்பில் சிந்திக்கக்கூடத் துணிய மாட்டார்கள்.

இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டால் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் தமிழ் அரசியல் தரப்புகள் சிந்திக்கக்கூட மாட்டார்கள். ஆனால், ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் அளவுக்கு அதிகமான நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர். வரமுடியாத அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவரப் போவதாகக்கூறி கூட்டமைப்பு காலத்தை வீணாக விரயம் செய்து கொண்டிருந்தது. அன்று புதிய அரசியல் யாப்புக்கான முயற்சியை ஆதரித்தவராகக் கருதப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவே இன்று பொலிஸ் அதிகாரத்தை ஒரு பக்கமாக வைத்துவிட்டு அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறுகின்றார். அவ்வாறாயின், முன்னைய ஆட்சிக் காலத்தில் பேசப்பட்ட புதிய அரசியல் யாப்பு கதைகள் அர்த்தமற்றவை என்பதுதானே பொருள்.

அரசியல் தீர்வுக் கதைகளை இன்னும் எத்தனை காலத்துக்கு தமிழ் மக்களை நம்ப வைக்க முடியும்? மைத்திரி ஆட்சிக் காலம் தெளிவான படிப்பினையை வழங்கியிருக்கின்றது. இப்போது, தமிழ் மக்கள் செய்ய வேண்டியது ஒன்றுதான், நாங்கள் ஏமாறுவதற்கு தயாரில்லை என்பதை தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கும் தீர்வைத் தருவார்கள் - நம்புங்கள் என்று கூறும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் நாங்கள் இனியும் ஏமாறத் தயாரில்லை என்று சொல்வதுதான்.

## நல்லூரான் திருவடி - 13

# தாயினும் நல்ல தலைவர்!

**திருமதி சீமாட்டி குமாரசாமி**

எனது தந்தையார் சிவதொண்டன் அடியார்களால் பேராதனை வேலுப்பிள்ளை என்று அழைக்கப்பட்டார். யோக சுவாமிகள் எனது தந்தையார் குடியிருந்த இல்லத்துக்கு வந்திருந்தார். அங்கே அவர் ஒரு சீமாட்டி வரப்போகிறார் என்று கூறி யாழ்ப்பாணம் சென்றுவிட்டார். அந்தச் சீமாட்டியாக வரும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தது. எனது தாயார் கர்ப்பவதி யாக இருந்தபோது எனது பெற்றோர் தமக்குப் பிறக்கப்போவது ஆணோ அல்லது பெண்ணோ என்றறியாதிருந்த வேளை சுவாமிகள் என்னைப் பற்றி அறிந்திருந்தார்.



குழந்தையாக அந்தப் பெரியார் மடியில் அமர்ந்து, தவழ்ந்து, நடை பயின்று பேராதனைப் பூங்காவில் அவருடன் ஓடி, ஆடித்திரியும் பாக்கியத்தைப் பெற்றிருந்தேன். எனக்கு ஏடு தொடக்க தகப்பனார் வழமையாக எடுத்துச்செல்லும் பொருட்களோடு, யோகரின் கொழும்புத்துறை குடிலுக்கு அழைத்துச் சென்றார். அச்சமயம் தமக்குப் பிடித்தமான உணவான இடியப்பத்தையும் சொதியையும் அவர் சாப்பிட்ட வண்ணமிருந்தார்.



என்னைக் கண்டதும் அவர் "வாடி சீமாட்டி, ஏடு தொடங்க வந்தாயா? வா", என்று கூறி அழைத்தார். பயமறியாதவளாக அவரருகே ஓடிச்சென்று நின்றேன். அவர் அப்போது தமது உணவில் கையை வைத்துப் பிசைந்து ஒரு சிறிய உருண்டையை எனது உள்ளங்கையில் வைத்து "சரி, படிப்போம், சொல்லு அ" என்று கூற, நானும் அந்த எழுத்தைக் கூறினேன். பின்னர் சாப்பிடு என்றார். நானும் சாப்பிட்டேன். இரண்டா வது உருண்டையையும் தந்து ஒன்று, இரண்டு, மூன்று என்று கூறி, சாப்பிடு என்றார். அதையும் சாப்பிட்டேன். மூன்றா வது உருண்டையைத் தந்து "வெள்ளைக்காரனுக்கு துரோகம் பண்ணக் கூடாது" எனக்கூறி, "சொல்லடி ஏ பி சி" என்றார். மூன்றாவது உருண்டையையும் உண்டபின்னர் "இனிப்போதும், போய்ப் படி" என்று கூறினார்.

எல்லோரும் அரிசியில் எழுதி ஏடு தொடங்குவார்கள். ஆனால், சுவாமி புரிந்த வித்தியாரம்பம் வித்தியாசமாக இருந்தது. அன்றுதொட்டு யோகர் எனது கல்வி வளர்ச்சியை அவதானித்து வந்ததை அறிவேன். நான் எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தி பெற்றதை சுவாமியிடம் கூறச்சென்றபோது அவர் என்னிடம் "என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டார். "படிக்கப்போகின்றேன்" என்று நான் கூறினேன். ஆப்போது அவர், "படி படி படி" என்று மூன்று முறை கூறி ஆசி வழங்கினார்.

முதலாவதாக படி என்று கூறியது என்னைப் படிக்கும்படி என்பதையும் இரண்டாவதாக படி என்று கூறியதை படிப்படியாக உயர்ந்து செல் என்பதையும் உணர்ந்தேன். மூன்றாவதாக படி எனக் கூறியது கீழ்ப்படிவுள்ளவராக இருக்கவேண்டும் என்ற அர்த்தத்தைக்கொண்டதாக இருந்தது. இது, யோகர் எனக்குத் தந்த முதல் பாடமாக இருந்தது.


படித்துப் பட்டதாரியாகி உத்தியோகம் கிடைத்ததும் முதல் சம்பளத்தில் சுவாமிக்கு வேட்டி, சால்வை மற்றும் சிறிது பணம், பழம், பாக்கு, வெற்றிலையோடு சென்றேன். அங்கே ஒரு சங்கீத வாத்தியார், ஒரு பிரா மணப் பையன் உட்பட வேறு சிலரையும் யோகர் அழைத்திருந்தார். பின்னர் சங்கீத வாத்தியாரைப் பார்த்து "சங்கீதத்தில் முதல் பாடவேண்டிய பாடலைப் பாடும் என்றார்." அப்போது அவ்வாத்தி யார், "வாதாபி கணபதிம்" என்று ஆரம்பித்த போது, "எல்லோரும் பாடுங்கோ" என்றார். நான் மௌனமாக இருந்தேன் "வித்தியாரம் பம் உனக்குத்தான், படி" என்றார் சுவாமி. இதன் பின்னர் தமக்கு தட்சணையாக வைக்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதியை வாத்தியாருக்கு, இது வித்தியாதானம் என்று கொடுத்து, இது சொர்ண தானம் என்று சிரித்தார். அதன்பின்னர் வேட்டியை எடுத்து பிராமணப் பையனுக்கு கொடுத்து இது வஸ்திர தானம் என்றார்.

இதனையடுத்து வித்தியா தானம், சொர்ண தானம், வஸ்திர தானம், பிரம்மனோ தானம் கேட்டுக்கொள் என்று கூறியதோடு, வாழ்வில் முக்கியமாக நிகழ வேண்டிய இந்தத் தானங்களோடு அன்ன தானமும் நிகழ வேண்டுமென சுவாமிகள் சிரித்தபடி கூறினார்.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒகஸ்ட் - 21 புதன்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 05
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவிதியை




**மேடம்**
உங்கள் இலக்குகளை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**இடபம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் புதிய பாதை தெரியும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனம்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிப்பதில் தாமதம் ஏற்படும். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் உங்களை ஆலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதிய வேலை கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். குடும்பத்தில் சலசலப்பு வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. உறவினர்களால் சங்கடங்கள் வரும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# மத்தியில் பதவி சுகத்துக்காக தி. மு. க. கூட்டணி துரோகம்!

## ஸ்டாலினுக்கு இ. பி. எஸ். பதில்

சென்னை, ஒக. 21

பா. ஜ. கவுடன் இரகசிய உறவு என்று எங்களைப் பார்த்து, மீண்டும் மீண்டும் ஸ்டாலின் சொன்னபோது அவருக்கு இனித்தது. இப்போது, அவர்களைப் பார்த்து, ஒரு முறை சொன்னதற்கே மூளை இருக்கிறதா? எனக் கேட்கிறார். அப்படி என்றால், நாங்கள் எத்தனை முறை ஸ்டாலினுக்கு மூளை இருக்கிறதா? என்று கேட்க வேண்டும்- இவ்வாறு அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பதிலளித்துள்ளார்.

தி. மு. கவினர் டில்லிக்கு காவடி எடுத்து தப்பிவிடலாம் என்று நினைத்தால் புத்திசாலிகளான தமிழக மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்று எச்சரிக்கிறேன் எனவும் எதிர்க் கட்சித் தலைவர் கூறினார்.

இது தொடர்பில் பழனிச்சாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், பதவி வரும்போது பணிவு வரவேண்டும், துணிவும் வர வேண்டும் தோழா என்று நம்மை எல்லாம் ஆளாக்கிய மறைந்த முதல்வர் எம். ஜி. ஆர். கூறியிருக்கிறார். நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அள்ளித் தெளித்து ஆட்சிக்கு வந்த மு. க. ஸ்டாலின், பணிவு என்றால் கிராம் என்ன விலை என்று கேட்பதோடு, அசட்டுத் துணிச்சலோடு வாய் வீரம் காட்டிக்கொண்டு மமதையின் உச்சியில் அலைகிறார்.

கருணாநிதி நாணய வெளியீட்டு விழா, தி. மு. க. நிகழ்ச்சி அல்ல, மத்திய அரசின் நிகழ்ச்சி என்றும், மத்திய அரசின் நிகழ்ச்சி என்பதால் ராகுல் காந்தியை அழைக்க அவசியமில்லை என்றும், பா. ஜ. கவுடன் இரகசிய உறவு வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை என்றும் பயத்தில் உளறியிருக்கிறார்.

கலைவாணர் அரங்கில் ரூ.100 நாணயம் வெளியிட்ட நிகழ்ச்சி தமிழக அரசு நடத்திய அரசு விழா. அழைப்பிதழில் எந்த இடத்திலும் மத்திய அரசுத் துறையின் பெயர் இடம் பெறவில்லை. மேலும், அழைப்பிதழ் கலைஞர் 100 என்று இலச்சினையுடன், தமிழக அரசு இலட்சினைதான் இடம் பெற்றுள்ளது. அனைத்துக்கும் மேலாக, அழைப்பிதழில் அனைவரையும் அழைத்தவர் தமிழக அரசு தலைமைச் செயலாளர். எனவே, ராகுல் காந்தி அல்லது அவரது தாயார் சோனியா காந்தி அல்லது காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜூன கார்கேவைக் கூட இந்த நிகழ்ச்சிக்கு அழைத்திருக்கலாம். கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு மேடையில் இடம் இல்லை என்றும் எதிர்க் கட்சித் தலைவர் கடுமையாகச் சாடியுள்ளார். (எ)

# பா. ஜ. கவுடன் இணக்கமாக செல்லும் முடிவை தி. மு. க. எடுக்கவே முடியாது

## மார்க்சிஸ்ட் மாநில செயலர் பாலகிருஷ்ணன்

திருவாரூர்,ஒக. 21

பா. ஜ. கவுடன் கூட்டணி வைப்பவர்களை எதிர்க்கின்ற அணியில்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதுமே இருக்கும் என்றும் பா. ஜ. கவுடன் இணக்கமாக செல்லும் முடிவை தி. மு. க. ஒருபோதும் எடுக்க முடியாது எனவும் அந்தக் கட்சியின் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் திருவாரூரில் செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாங்கள் தி. மு. கவுடன் தேர்தல் ரீதியாகவும் கொள்கை அளவிலும் கூட்டணியில் உள்ளோம். ஆளுநரின் தேநீர் விருந்துக்கு செல்வது, நாணய வெளியீட்டு நிகழ்வில் ராஜ்நாத் சிங் பங்கேற்பது போன்ற நிகழ்வுகள் அரசு சார்பில் நடத்தப்பட்டவை. என்னதான் விருந்துக்கு சென்றாலும், ராஜ்நாத் சிங்கை அழைத்தாலும் தமிழகத்தில் அரசியல் மாற்றம் ஏற்படாது. பா. ஜ. க. தன்னை கொள்கை ரீதியாக மாற்றிக் கொள்வதற்கும் எந்த வழியும் இல்லை.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நினைவு நாணயத்தை வெளியிட உடனடியாக ஒத்துக் கொண்ட மத்திய அரசு, தமிழக அரசு கேட்கும் நிதியை, கொடுக்க மறுக்கிறது. மத்திய அரசை பொறுத்தவரை, தமிழக அரசையும், தமிழக மக்களையும் புறந்தள்ளும் போக்கில் எந்த மாற்றமும் இல்லை. அதனால், பா. ஜ. க.வுடன் இணக்கமாக செல்லும் முடிவை தி. மு. க. எடுக்க முடியாது- என்றார். (எ)

## கருணாநிதி நினைவு நாணயம் வெளியீடு

# தமிழக அரசின் அழைப்பை ஏற்றே ராஜ்நாத் சிங் விழாவில் பங்கேற்றார்

சென்னை, ஒக. 21

கருணாநிதி நினைவு நாணய வெளியீட்டு விழாவில் தமிழக அரசின் அழைப்பை ஏற்றே மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்றார் என மத்திய இணையமைச்சர் எல். முருகன் விளக்கமளித்துள்ளார்.

தென்னிந்திய அளவிலான செய்தி ஒலி - ஒளிபரப்புத் துறை அதிகாரிகளுக்கான ஆய்வுக் கூட்டம் சென்னை அகில இந்திய வானொலி மையத்தில் நடைபெற்றது.



இதன் பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியவை வருமாறு,

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி நினைவு நாணய வெளியீட்டு விழாவில் அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்றதை அரசியலுக்கு அப் பாற்பட்டு தான்பார்க்க வேண்டும். தமிழக அரசின் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, அழைப்பு விடுக்கப்பட்டதன் பேரில் தான் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார். இதில் அரசியலுக்கு இடமில்லை - என்றார். (எ)

# "பா. ஜ. கவின் சதியை முறியடிக்க வேண்டும்"

சென்னை, ஒக. 21

மோடி தலைமையிலான ஒன்றிய பா. ஜ. க. அரசு, சமூக நீதியை குழி தோண்டி புதைக்கும் அடாத செயலில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. மேலும், அரசு நிர்வாகத்தை ஆர். எஸ். [illegible] அரசின் சதித்திட்டத்தை முறியடிக்க வேண்டும் என ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

அரசு நிர்வாகத்தில் ஆர். எஸ். எஸ் அமைப்பின் பின்னணியில் இருந்து வந்த தனியார் நிறுவன உயர் அலுவலர்களை அரசின் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளாக நியமனம் செய்யும் திட்டத்தை செயல்படுத்தி வருவது கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவியை ஏற்குமாறு 71 தடவைகள் அழைத்தனர்!

## ஆயினும் நிராகரித்தேன் என்கிறார் சஜித்

கொழும்பு, ஓக. 21

**கடந்த 2018 ஆம் ஆண்டு 52 நாள் ஆட்சி கவிழ்ப்பு சூழ்ச்சியின்போது பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு 71 தடவைகள் அழைப்பு விடுத்த போதும் அதனை நிராகரித்திருந்தேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**



2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் ஏழாவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று முன் தினம் மாலை மீரிகம நகரில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் சந்தர்ப்பவாத அரசியலை பின்பற்றுவதில்லை. 2018 ஆம் ஆண்டு 52 நாள் சூழ்ச்சியின்போது பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு 71 தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் அந்த அழைப்பை நான் நிராகரித்திருந்தேன்.

அந்தப் பிரதமர் பதவிக்காக மக்கள் எனக்கு வாக்கு அளிக்கவில்லை. எனவே சந்தர்ப்பவாத பெருச்சாளித்தன அரசியலை மேம்படுத்தி பதவிகளின் பின்னால் செல்வதற்கு எனக்கு விருப்பமில்லை.

அந்தக் கொள்கையினால் தான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் பதவியை பொறுப்பேற்க்கு மாறு கூறியபோதும் அதனை நான் நிராகரித்தேன்.

அவ்வாறு அந்த சந்தர்ப்பத்தில் சென்று இருந்தால் இந்த நாட்டை சூறையாடி, வளங்களையும் பணத்தையும் திருடிய திருடர்களின் ஒன்றாக இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

திருடர்களை பாதுகாக்கின்ற வாசல் காவலாளியாகவும் இருந்திருப்பேன். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொறுப்புகளின் ஊடாகவும் பணத்துக்காகவும் சோரம் போவதற்கு நான் தயாரில்லை.

எந்த ஒரு பிரபலமான பதவியாக இருந்தாலும் எவ்வாறான முன்மொழிவுகளை முன் வைத்தாலும் பொதுமக்களை மையப்படுத்திய அரசியலில் இருந்து விலகிச் செயல்படப்போவதில்லை. சஜித் பிரேமதாஸ ஆகிய என்னையும் எனது குழுவையும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் விலை பேச முடியாது.

முழு நாடும், மலை போல் இருக்கும் கடனுக்குள் சிக்கி இருக்கிறது. மக்களின் வாழ்க்கைத் தரம் சுருங்கி இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில், பல சிரமங்களை எதிர்கொண்டுள்ள 220 இலட்சம் மக்களை அந்தத் துன்பத்திலிருந்து மீட்டெடுத்து அவர்களை வளப்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும் - என்றார்.

---

*2009ஆம் ஆண்டுக்கு முன்னர் வழங்கப்பட்ட*

# கனரக வாகன சாரதி பத்திரங்கள் இரத்து

கொழும்பு, ஓக. 21

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் வழங்கப்பட்ட அனைத்து கனரக வாகன ஓட்டுநர் உரிமங்களையும் அடுத்த 3 மாதங்களுக்குள் இரத்துச் செய்ய மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பழைய சாரதி அனுமதிப் பத்திரங்கள் அனைத்தையும் இரத்துச் செய்வதன் கீழ் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் அச்சிட முடியாமல் குவிந்து கிடக்கும் 3 இலட்சம் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடும் பணி அடுத்த சில மாதங்களுக்குள் நிறைவடையும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

---

# தென்மேற்குப் பகுதியில் நிலவிவரும் மழையுடனான வானிலை தொடரும்

கொழும்பு, ஓக. 21

இலங்கையின் தென்மேற்கு பகுதியில் நிலவும் மழையுடனான வானிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நுவரெலியா, களுத்துறை கேகாலை, இரத்தினபுரி, கொழும்பு, காலி மற்றும் மாத்தறை ஆகிய 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய மற்றும் புளத்சிங்கள ஆகிய பிரதேசங்களுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தின் எஹெலியகொட, கலவானை மற்றும் எலபாத்த ஆகிய பிரதேசங்களுக்கும் தொடர்ந்தும் மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

---

# வவுனியாவில் பாரவூர்தி மோதி ஒருவர் உயிரிழப்பு!

வவுனியா, ஓக. 21

வவுனியா - மூன்றுமுறிப்பு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மதவாச்சி பகுதியை நோக்கி பயணித்த பாரவூர்தி ஒன்று, வீதியில் சென்ற ஒருவர் மீது நேற்று முன் தினம் மோதியுள்ளது. இதன்போது காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் ஆள் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாரவூர்தியின் சாரதி, சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்ற நிலையில், அவர் மிஹிந்தலை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

# அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு 7 இலட்சம் அரச அலுவலர் தகுதி

கொழும்பு, ஓக. 21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு 7 இலட்சம் அரச சேவையாளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்கெடுப்பை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4, 5 மற்றும் 6ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு செப்ரெம்பர் 4ஆம் திகதி, அஞ்சல் மூல வாக்கை செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் குறித்த 3 தினங்களில் அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தவறியவர்களுக்காக செப்ரெம்பர் மாதம் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகள் வாக்களிப்புக்கான மேலதிக தினங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன. (அ)

---

# கறைபடியாத கரங்கள் பெருமளவில் சஜித் அணியில் இருப்பதால் ஆதரவு!

## ரிஷாத் பதியுதீன் கூறுகிறார்

மன்னார், ஓக. 21

கறைபடியாத கரங்களை அதிகமாகக்கொண்ட அணியை, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தலைமைத்துவம் ஏற்று வழிநடத்துவதாலேயே, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அவருக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்ததாக, அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முசலி, கொண்டச்சியில் இடம்பெற்ற "ரிஷாத் பதியுதீன் வெற்றிக் கிண்ண" கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரமேதாஸவுக்கு எமது கட்சியின் ஆதரவை நல்குவதாக அறிவித்த பின்னர், முதன்முதலாக ஒரு பொது நிகழ்வில் பங்கேற்று உரையாற்றக் கிடைத்துள்ளது. இந்தத் தேர்தலில் நாம் ஏமாந்துவிடக் கூடாது. எமக்குள் எத்தகைய கருத்துவேறுபாடுகள் இருந்தாலும் சமூகத்தின் நன்மை கருதி, புத்திசாலித்தனமாக வாக்குகளைப் பிரயோகிக்கும் தருணம் இது. நாம் மிக நிதானமாகச் சிந்திக்க வேண்டியதொரு காலகட்டத்தில் இருக்கிறோம்.

நான்கு வேட்பாளர்களுக்கிடையே தீவிர போட்டி நிலவுகின்றது. மூவரை நிராகரித்து, நாம் சஜித்துக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தமைக்கான காரணங்கள் பல உண்டு. கடந்த காலங்களைப் போன்று, எதிர்காலத்தில் இனவதப் பிசாசு தலையெடுத்து, சிறுபான்மைச் சமூகத்தை துவம்சம் செய்யக் கூடாது.

ஜனாஸாக்களை எரிக்கும் அரசியல் கலாசாரம் மீண்டும் உருவெடுக்கக் கூடாது. சகல சமூகங்களையும் அரவணைத்து செல்லக்கூடிய தலைவரையே நாம் தெரிவுசெய்துள்ளோம். மையத்துக்கள் எரிந்துகொண்டிருந்தபோது, அமைச்சரவையில் பக்கவாத்தியம் இசைத்துக்கொண்டிருந்த வர்கள் ரணிலுடன் சேர்ந்துள்ளனர்.

கோட்டாவின் 20ஆவது திருத்தம் 3/2 பங்கினால் நிறைவேற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தபோது, நமது சமூகத்தைச் சார்ந்த 6 உறுப்பினர்கள் ஆதரவளித்து, 144 என்ற எண்ணிக்கையிலிருந்த கோட்டாவின் அரசுக்கு 150 என்ற எண்ணிக்கையை பெற்றுக்கொள்ளச் செய்தனர். அவர்களும் இப்போது ரணிலின் அணியில் இணைந்து நமது சமூகத்துக்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

கள்வர்களின் கூடாரத்தில் இருந்த பல முன்னாள் அமைச்சர்கள் ரணிலுடன் தற்போது இணைந்து, இனிப்பான கதைகளைப் பேசி சிறுபான்மை சமூகத்தின் வாக்குகளை வசீகரிக்க முற்படுகின்றனர். எனவே, இந்த அணிக்கு நாம் வாக்களிக்க முடியுமா?

ஆயுதக் கலாசாரத்தைக் கையிலெடுத்து, இந்த நாட்டிலே ஜனநாயகத்தைக் கொலை செய்தவர்கள், இப்போது ஜனயாகம் பற்றி வாய் கிழியக் கத்துகின்றனர். இவர்களை நம்ப முடியுமா?

அபிவிருத்திக்கும் அற்ப விடயங்களுக்காகவும் நாம் ஏமாந்து விடக் கூடாது. இது மக்கள் பணம். ஆட்சியாளர்களின் பணம் அல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள் - என்றார். (அ)

---

# யுக்தியவில் 719 பேர் கைது

கொழும்பு, ஓக. 21

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 719 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 712 ஆண்களும் 07 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 11 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய சந்தேக நபர்களை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 387 கிராம் 434 மில்லி கிராம் ஹெரோயின், 276 கிராம் 06 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 665 கிராம் கஞ்சா ஆகிய போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி நாட்டுக்குப் பெரும் சாபக்கேடு!

## ரொஷான் ரணசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 21

**"நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாகக் கூறி ஆட்சிக்குவந்த எவரும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை" என ஜனாதிபதி வேட்பாளர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனக் கூறியே சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சிக்கு வந்தனர்.

ஆனால் அதற்கான எந்த நடவடிக்கையினையும் அவர் எடுக்கவில்லை. அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்வதற்கு குறைந்தபட்சம் பிரேரணை யொன்றினையேனும் முன்வைக்க அவர்களால் இயலவில்லை.

அதேபோல் 2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் ஆட்சிக்கு வந்தபோதும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாக கூறினர். அதனைச் செய்யவில்லை.

1977 ஆம் ஆண்டு முதல் இந்த நாட்டுக்கு சாபக் கேடாகவே நிறைவேற்ற அதிகார ஜனாதிபதி முறைமை காணப்படுகின்றது. நாட்டில் தேர்தலொன்றை நடத்துவதற்கு 1000 மில்லியன் ரூபா செலவாகும்.

எனவே தேர்தல்களைப் பிற்போடுவதன் ஊடாக தேர்தல் செலவீனங்களே அதிகரித்துச் செல்கின்றன. இன்று இந்த நாட்டில் 4 தேர்தல்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. வேட்பாளர் ஒருவரல் செலவிட வேண்டிய நிதி தொடர்பான விவரங்களை தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் அறிவித்திருந்தது.

ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் தேர்தல்கள் ஆணைக்குழு வினவியிருந்தது. வாக்காளர் ஒருவருக்கு சாதாரணமாக 20 ரூபா செலவிட முடியும். அந்தவகையில் மொத்தமாக 36 கோடி ரூபாவை செலவிட முடியும் என நான் கூறினேன். ஆனால் ஒரு சில வேட்பாளர்கள் வாக்காளர் ஒருவருக்கு குறைந்த பட்சம் 300 ரூபா செலவிடவேண்டும் என கூறுகின்றனர்.

இந்த நாட்டில் ஒரு கோடியே எழுபது லட்சம் வாக்களார்கள் உள்ளனர். அவ்வாறாயின் 300 ரூபா அடிப்படையில் ஒரு கோடியே 70 லட்சம் வாக்களர்களுக்கு செலவாகும் நிதி தொகையினை மதிப்பீடு செய்ய வேண்டும். இது நியாயமற்ற கோரிக்கையாகும். சுமார் 510 கோடி ரூபா செலவாகும் அதாவது 5 பில்லியன் ரூபா செலவாகும். இது பாரிய மேசடியாகும் - என்றார். (அ)

# சீரற்ற வானிலை காரணமாக 3 ஆயிரத்து 243 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 21

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் களுத்துறை, புத்தளம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 929 குடும்பங்களைச் சேர்ந்த 3,243 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலையினால் இருவர் காயமடைந்துள்ளதுடன், 27 வீடுகளுக்கு பகுதியளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் மதுராவளை பிரதேச செயலகப் பிரிவில் வரகாகொட கலவெல்லவ வீதி, அலமோதர - பரகஸ் தோட்ட வீதி, மில்லனிய பிரதேச செயலகப் பிரிவின் பனாகொட- நர்துபான வீதி, புலத்சிங்கல- மொல்காவ வீதி, புலத்சிங்கல - மொல்காவ வீதி, புலத்சிங்கலத்தீ பிரிவின் செங்கலத்தலை வீதி, உப்பலத்தீவில் உள்ள பல வீதிகள் மற்றும் பாலிந்தநுவர பிரதேச செயலகப் பிரிவில் பதுரலிய - பெனிகல வீதி ஆகியன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலகங்களுக்கும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மண்சரிவு அபாயம் காரணமாக சிவப்பு அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

கொழும்பு, காலி, கேகாலை, மாத்தறை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு நீடிக்கப்பட்டுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

தென் மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

பாதிக்கப்படும் பகுதிகளில் வசிப்பவர்கள் விழிப்புடன் இருக்கவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# விமான நிலையத்திலிருந்து ஆரம்பித்த புதிய சொகுசு பஸ் சேவை இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக. 21

கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையம் மற்றும் மாகும்புர பல்வகை போக்குவரத்து நிலையத்துக்கு இடையில் போக்குவரத்து சேவைக்காக ஆரம்பிக்கப்பட்ட புதிய சொகுசு பஸ் சேவை நேற்று முன் தினம் திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்கவால், கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்த புதிய சொகுசு பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த 16 ஆம் திகதி விமான நிலையம் - கோட்டை பஸ் ஊழியர் சங்கம் புதிய சொகுசு பஸ் சேவைக்கு எதிராக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது.

அத்தோடு இது தொடர்பில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு மற்றும் தேர்தல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு பதிவு செய்தது.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு வாடகை வாகன சங்கமும் ஆதரவை வழங்கி இருந்தது.

இந்நிலையில், முறைப்பாடுகளை பரிசீலித்து ஆரம்பிக்கப்பட்டு 4 நாட்கள் மாத்திரம் சேவையில் ஈடுப்பட்ட விமான நிலைய புதிய சொகுசு பஸ் போக்குவரத்து சேவையை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இடைநிறுத்தப்பட்டுள்ள சொகுசு பஸ் போக்குவரத்து சேவைக்கு பதிலாக, விமான நிலையத்திலி ருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையம் மற்றும் மாகும்புர பல்வகை போக்குவரத்து நிலையத்துக்கு தொழிற்சங்கத்தின் பத்து பஸ்கள் சேவைக்கு ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக விமான நிலைய - கோட்டை பஸ் ஊழியர் சங்கத்தின் தலைவர் இந்திக்க குணசேகர தெரிவித்துள்ளார். (அ)

# புதையல் தோண்டியதாக தேரர் உட்பட 6 பேர் கைது!

கொழும்பு, ஓக. 21

மொரகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதையல் தோண்டிய குற்றச் சாட்டில் தேரர் உட்பட 06 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மொரகொட பொலிஸார் தெரிவித்தனர்.

மொரகொட பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 40 வயதுடைய தேரரொருவரும் காணப்படுவதாக பொலிஸார் கூறினர்.

ஏனைய சந்தேக நபர்கள் அடியாகல மற்றும் அகலவத்தை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25, 33, 36 மற்றும் 58 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# தேர்தல் வாக்குறுதிகள் மாத்திரம் போதாது அவை எத்தனை நாட்களுக்குள் நடைமுறை?

## வேட்பாளர்களிடம் கேள்வி எழுப்புகிறது பவ்ரல்

கொழும்பு, ஓக. 21

ஜனாதிபதி வேட்பாளர்கள் பரந்த வார்த்தைகள் கவர்ச்சிகரமான திட்டங்களை முன்வைப்பதற்கு பதில் அவற்றை தாங்கள் நடைமுறைப்படுத்துவதற்கான குறிப்பிட்ட கால அவகாசத்தை முன்வைக்கவேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் வேண்டுகோள் விடுக்கவுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசநாயக்க 26ஆம் திகதி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடவுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவார்.

சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை விரைவில் வெளியிடவுள்ளார்.

கடந்த காலங்களிலும் ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டனர். ஆனால் அவர்களின் வாக்குறுதிகளிற்கும் அவை நடைமுறைப்படுத்தப்படு வதற்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்பட்டது.

அவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த விடயங்கள் யதார்த்த சூழ்நிலையுடன் ஒத்துப்போகாததாக காணப்பட்டமையே இதற்கான காரணம்.

அவர்கள் சந்தேகமற்ற வாக்காளர்களை கவர்வதற்காக வாக்குறுதிகளை வழங்கினார்கள்.

அல்லது அவர்களின் பதவிக்காலத்தின் இடையில் சூழ்நிலைகள் மாறியதால் அவர்களால் தங்கள் கொள்கைகளை நடைமுறைப்படுத்த முடியாத நிலையேற்பட்டது.

இலங்கை சுதந்திரத்தின் பின்னர் சந்தித்த மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முயற்சித்துக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளது.

அரசியலை சுத்தம் செய்யும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேட்பாளர்கள் தங்கள் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கால எல்லையை முன்வைக்கும் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனத்துடன் செயற்திட்டமொன்றையும் பவ்ரல் கோரவுள்ளது.

ஒவ்வொரு வேட்பாளருக்கும் தங்கள் சொந்த கொள்கைகளை திட்டங்களை கொண்டிருப்பதற்கான உரிமையுள்ளது. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை அவர்கள் மக்களுக்கு தெரிவிக்கவேண்டும் என பவ்ரல் எதிர்பார்க்கின்றது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான காலக்கெடுவை முன்வைக்குமாறு வேட்பாளர்களை கோரவுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

ஒவ்வொரு கொள்கை விடயத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடுகளை முன்னெடுப்பார்கள் என்பதை வேட்பாளர்கள் கோடிட்டுக் காட்டவேண்டும் என தெரிவித்துள்ள பவ்ரல், அந்த கொள்கைகளின் பொருளாதார அரசியல் சமூக தாக்கங்கள் குறித்த விவரங்களை பொதுமக்களுக்கு முன்வைக்கவேண்டும் எனவும் கோரியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் ஆட்சியில் புதிய அரசமைப்பு 3 மாதங்களுள் பணிகள் ஆரம்பம்!

## அஜித் பி பெரேரா அறிவிப்பு



கொழும்பு, ஓக. 21

**சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி ஆட்சியின் கீழ் புதிய அரசமைப்பு இயற்றப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி அஜித் பி பெரேரா தெரிவித்தார்.**

புதிய அரசு அமையப் பெற்று முதல் மூன்று மாதங்களுக்குள் இதற்குரிய பணி ஆரம்பிக்கப்பட்டு விரைவில் அது முடிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என கடந்த காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி பிரசாரம் செய்தது. ஆனால் இம்முறை அது பற்றி பேசப்படுவதில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பில் ஐ.ம.சவின் நிலைப்பாடு மாறிவிட்டதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அஜித் பி பெரேரா மேலும் கூறியவை வருமாறு:-

பல திருத்தங்களால் மாற்றியமைக்கப்பட்டுள்ள தற்போதைய அரசமைப்புக்கு பதிலாக புதியதொரு அரசமைப்பை நாட்டுக்கு அறிமுகப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

புதிய அரசமைப்பை இயற்றும் பணியை மூன்று மாத காலப்பகுதிக்குள் ஆரம்பித்து, சட்டமூலம் தயாரிக்கும் பணியை கூடியவிரைவில் முடிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் சர்வ கட்சி குழுவொன்று அமைக்கப்பட்டு இதற்குரிய பணி இடம்பெறும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். அதற்காக எமது கட்சித் தலைவர் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்.

ஜனாதிபதித் தேர்தலில் நாம் வெற்றிபெறுவோம். நாடாளுமன்றத்தின் பலமும் கிடைக்கப் பெறும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு, தேர்தல்முறை மாற்றம், நீதித்துறையை வலுப்படுத்தல், மக்களின் அடிப்படை உரிமைகள், கலாசார உரிமைகள், பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசமைப்பு அமையும் - என்றார். (அ)

# ஜேர்மனியில் தொழில் தருவதாக நிதி மோசடி செய்தவர் சிக்கினார்

கொழும்பு, ஒக. 21

ஜேர்மனியில் தொழில் பெற்றுத் தருவதாக நிதி மோசடியில் ஈடுபட்ட ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - வாழைத்தோட்டம் உள்ளிட்ட பல பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட நீதிபதி மற்றும் சட்டத்தரணியாக என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டுள்ள அந்த நபர் ஜேர்மனியில் தொழில் பெற்றுத் தருவதாக கூறி 24 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதியை மோசடி செய்துள்ளார்.

கைதானவர் பேலிய கொடை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் பொருளாதார சூழல் உருவாக்கப்படும்

## உறுதிபடக் கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஓக. 21


சர்வதேச முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கான வேலைத்திட்டத்தை தமது அரசாங்கம் உரிய பொறிமுறையில் உருவாக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டில் ஊழல் மோசடி முதலில் ஒழிக்கப்பட வேண்டும். அதற்கமையவே சர்வதேச முதலீட்டாளர்களின் கவனம் எம்மீது திரும்பும். இதன்மூலம் வேறு நாடுகளுக்குச் செல்லும் முதலீட்டாளர்களை இலங்கையின் பக்கம் திருப்ப முடியும்.

சாதகமான பொருளாதார சூழலை மையப்படுத்தி நேரடி வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்கின்ற பொருளாதார சூழலை தாம் உருவாக்க எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (அ)

# சிலிண்டருக்கு சிக்கல் இல்லை



கொழும்பு, ஒக. 21

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்ட எரிவாயு சிலிண்டர் தொடர்பான ஆட்சேபனைகளை தேர்தல்கள் ஆணைக்குழு நிராகரிக்க தீர்மானித்துள்ளது.

கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் எரிவாயு சிலிண்டர் சின்னம் தமது அணிக்கு வழங்கப்பட்டதாக அரசியல் கட்சியொன்று முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

உள்ளூராட்சி தேர்தலின் போது காஸ் சிலிண்டர் சின்னத்தை கேட்டு பலர் கோரிக்கை வைத்திருந்தனர். ஒதுக்கப்பட்ட சின்னங்கள் அரசியல் கட்சிகளுக்கு மட்டுமேயாகும். மற்றவை யார் வேண்டுமானாலும் பயன் படுத்தலாம்.

எனவே, பொய்யான விஷயங்களுக்கு வாய்ப்பளிக்கக் கூடாது. இவற்றுக்குப் பதில் சொல்வதும் பொய்யானது, ஊடகங்களில் விளம்பரம் பெறுவதற்காக இப்படிச் செய்கிறார்கள் - என்றார். (அ)

# இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குள் வந்த 519 கிலோ இஞ்சி!

## சந்தேக நபர் ஒருவர் மன்னாரில் கைது

மன்னார், ஒக. 21

இந்தியாவிலிருந்து மீன் பிடிப் படகுகள் மூலம் சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 519 கிலோ 750 கிராம் இஞ்சியுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

மன்னார் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பை மேற்கொண்டபோது, இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இஞ்சியுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மன்னாரைச் சேர்ந்த 44 வயதுடையவராவார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இஞ்சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையினாலும், விலை அதிகரிப்பினாலும், இந்தியாவிலிருந்து பச்சை இஞ்சி கடத்தல் மேற்கொண்டு அதிக விலைக்கு விற்பனை செய்ய முயற்சித்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் இஞ்சியை பல பைகளில் பொதி செய்து வெவ்வேறு பகுதிகளுக்கு விற்பனை செய்ய தயார் நிலையில் இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து இதுவரை 666 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 21

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் (ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி) 35 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி வரை) 666 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்நிலையில், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 349 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 293 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. (அ)

# சிறுவர் இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகள் எண்ணிக்கை வீழ்ச்சி

கொழும்பு, ஓக. 21

கடந்த மார்ச் மாதம் வரையான பத்து வருட காலப்பகுதிக்குள் அனாதை இல்லங்களில் குழந்தைகளின் எண்ணிக்கை 3353 ஆள் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2014ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரையிலான தரவுகளை ஆராய்ந்ததில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் 2014ஆம் ஆண்டில், நாடளாவிய ரீதியில் உள்ள 38 கிளைகளில் தங்கியிருந்த குழந்தைகளின் எண்ணிக்கை 12,610 ஆகும்.

எனினும், டிசெம்பர் 2023 இற்குள் அந்த இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 9258 ஆகக் குறைந்துள்ளது.

இதற்கிடையில், டிசெம்பர் 2023 இறுதிக்குள் குழந்தைகளுக்கு எதிரான 605 கடுமையான பாலியல் துஷ்பிரயோகங்கள் நடந்துள்ளன.

ஜூலை 2024 இல் குழந்தைகள் பாதுகாப்பு அமுலாக்கக் குழு நியமிக்கப்பட்டதுடன் செப்ரெம்பர் 2023 இல் நடைபெற்ற கூட்டத்தில் அனைத்து மாகாண நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு சேவை ஆணையர்களிடமிருந்தும் குழந்தைகள் இல்லம் மற்றும் ஊட்டச்சத்து தேவைகள் குறித்த அறிக்கை கோரப்பட்டுள்ளது என்றுள்ளது. (அ)

# கேகாலை மாவட்டத்தில் அலங்கார மீன் வளர்ப்பு

கொழும்பு, ஓக. 21

கேகாலை மாவட்டத்தில் அலங்கார மீன் வளர்ப்பை மேற்கொள்வது தொடர்பான ஆய்வுகள் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ருவன்வெல்ல பிரதேச செயலகத்தினூடாக இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது மீன்களுக்கு ஏற்படும் நோய் தாக்கங்கள் மற்றும் நீர் மாதிரிகள் என்பன சோதனைக்குட்படுத்தப்பட்டன.

சப்ரகமுவ பல்கலைகழகத்தின் பேராசிரியர் நிரோஷன் வல்பிட்டவின் தலைமையில் இந்த [illegible] முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கட்சிப் பதவிகளிலிருந்து எச்.எம்.எம். ஹரீஸ் நீக்கம்!

கொழும்பு, ஓக. 21

முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீட உறுப்புரிமையில் இருந்தும், பிரதித் தலைவர் பதவியிலிருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் நீக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற ஆதரித்து பிரசாரம் செய்ய கட்சி மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமையச் செயற்படத் தவறியமைக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இதற்கான கடிதம் முஸ்லிம் காங்கிரஸால் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ் போதை விற்ற 15 பேர் உட்பட 59 பேர் பொலிஸாரிடம் சிக்கினர்



காத்தான்குடி, ஒக. 21

**மட்டக்களப்பு, காத்தான்குடியில் ஐஸ் போதைப்பொருள் விற்பனையாளர்கள் 15பேர் உட்பட 59 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.**

யுக்திய போதை ஒழிப்பு திட்டத்தின் கீழ் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பு நடவடிக் கையிலேயே ஐஸ் போதை, கசிப்பு விற்பனை மற்றும் திருட்டு சம்பவங்களுடன் தொடர்பு பட்ட 59 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப் பதிகாரி ஜி. கஜ நாயக்கா தெரி வித்தார்.

ஐஸ் போதைப்பொருள் விற் பனையில் ஈடுபட்ட 15 பேர் 350 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி, கசிப்பு விற் பனை மற்றும் வீடு உடைத்தல் மற்றும் திருட்டு சம்பவங்களு டன் தொடர்புபட்ட 44 பேரும் அடங்கலாக 59 பேர் கைதுசெய் யப்பட்டுள்ளனர் - என்றார். (எ)

# நாட்டுக்கு பொருத்தமான ஜனாதிபதி ரணில்தான்

## சிறீ லங்கா ஜனநாயக கட்சி

சம்மாந்துறை, ஒக. 21

நாட்டை இரண்டே வரு டங்களில் மீட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பலப் படுத்தி தலை சிறந்த நாடாக முன்னேற்றவே எமது கட்சி அவரை ஆதரிக்கத் தீர்மானித் தது என சிறீ லங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் எம். முஸ்தபா தெரிவித் தார்.

அம்பாறை, சம்மாந்துறை யில் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பெரும்பான்மை சிங்கள மக் கள் மட்டுமல்ல தமிழ், முஸ் லிம், மலையக மக்களின் அதி கூடிய வாக்கும் ரணிலுக்கே உள்ளது என்பதை செப். 22ஆம் திகதி இந்த நாடு தெரிந்து கொள் ளும் என்றும் அவர் கூறினார். (எ)



# வடபத்திரகாளியம்மன் ஆலய கும்பாபிஷேகம்

பெரியகல்லாறு, ஒக. 21

மட்டக்களப்பு மாவட்டத் தின் பிரசித்திபெற்ற பெரிய கல்லாறு உதயபுரம் அருள்மிகு சிறீ வடபத்திரகாளியம்மன் ஆலய மகா கும்பிஷேகம் திங் கட்கிழமை நடைபெற்றது.

கொக்கட்டிச்சோலை சிறீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பிரதம குரு சிவசிறீ மு. கு. சச்சி தானந்த மூர்த்தி குருக்கள் தலை மையில் இந்த கும்பிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தில் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடை பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்கா பிஷேகம் நடைபெறவுள்ளது.

# கட்சியின் கட்டுப்பாடுகளையும் மீறி ரணிலுக்கு ஆதரவு வழங்கியது ஏன்?

## மட்டு. எம். பி. மௌலானா விளக்கம்

மட்டக்களப்பு, ஒக. 21

கட்சியின் கட்டுப்பாடுகளை யும் மீறி ரணில் விக்கிரமசிங் கவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கத் துணிந்தது அவருக்கு நாட்டு மக்கள் சார்பில் நன்றி செலுத்துவதற்காகும் என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் அலி ஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

எமது நாட்டின் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வரக்கூடிய தகுதியும் தராதரமும் ஜனாதி பதி வேட்பாளர்களுள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே உள்ளது.

அதனால் தான் கட்சிக் கட் டுப்பாட்டையும் மீறி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கத் துணிந்தேன்.

தனது நிலைப்பாடு பற்றி மக்களுக்கு ஆற்றிய உரையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஜனாதிபதித் தேர்தல் நாட்டின் தலைவிதியை நிர்ண யிக்கப் போகின்ற ஒன்றாகும். இந்தத் தேர்தலில் கட்சிக் கொள்கைகளெல்லாம் ஒரு பக் கம் இருக்கட்டும், அடுத்த பொதுத் தேர்தலில் நான் பாரா ளுமன்ற உறுப்பினராக வரு வேனோ இல்லையோ? அதனை பின்னர் பார்ப்போம்.

சின்னா பின்னமாக மாறி சீரழிந்த எமது நாட்டை மீட்டு இன மத மொழி பேதமின்றி நாட்டு மக்கள் அனைவருமே சுதந்திரமாக தமது மார்க்க கடமைகளை நிறைவேற்றக் கூடிய நிலைமைக்கு இந்த நாட்டை கொண்டு வந்த பெருமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சாரும்.

ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கோவிட் - 19 தொற்று காரணமாக உம்ரா மற்றும் ஹஜ் கடமைகளை நிறைவேற்றுவதில் முஸ்லிம் மக்கள் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தனர். ஆனால், அந்த நிலமை இன்று மாறியி ருக்கிறது.

அப்படியான சுமூகமான நிலையை ஏற்படுத்திய ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி செலுத்த மக்களுக்கு கிடைத் துள்ள அரிய சந்தர்ப்பமான ஜனாதிபதித் தேர்தலை பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித் தார். (எ)

# புலமைப்பரிசில் மாணவருக்கு இலவச மீட்டல் கருத்தரங்கு


மாளிகைக்காடு, ஒக. 21

கிழக்கு இளைஞர் அமைப்பு மற்றும் மயோன் கல்வி அபிவி ருத்தி அமைப்பு என்பன இணைந்து ஒழுங்கு செய்திருந்த "சிறுவர் கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டுவோம்" எனும் தொனிப்பொருளில் அமைந்த 5 ஆம் ஆண்டு புல மைப்பரிசில் பரீட்சைக்கு தோற் றும் மாணவர்களுக்கான இல வச மீட்டல் கருத்தரங்கு அம் பாறை, மாளிகைக்காடு பாவா றோயல் வரவேற்பு மண்ட பத்தில் திங்கட்கிழமை நடை பெற்றது.

கிழக்கு இளைஞர் அமைப் பின் ஸ்தாபக தலைவர் தானிஸ் றஹ்மதுல்லா தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் மயோன் கல்வி அபிவிருத்தி அமைப்பின் தவிசாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்க ளுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்தக் கருத்தரங்கில் ஆசிரி யர்களான எம். எச். எம். சதாத் மற்றும் எம். ஐ. முறாத் ஆகி யோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர். (எ)





# கோவிட் -19 மற்றும் பொருளாதார நெருக்கடி காலத்தில் உரிமைகள் தொடர்பில் ஆராய்வு

அட்டாளைச்சேனை, ஒக. 21

தொற்றுநோய் கால நீதி மற்றும் சுகாதார உரிமை தொடர்பான மக்கள் ஆணை யம் நடத்திய கோவிட் -19 மற்றும் பொருளாதார நெருக் கடி காலத்தில் உங்களது சுகா தார உரிமைகள் மீறப்பட்டதா? உங்களிடம் மறக்க முடியாத அனுபவம் உள்ளதா? என்பது தொடர்பிலான பொது விசா ரணை நிகழ்ச்சி திங்கட்கிழமை காலை முதல் மாலை வரை அட்டாளைச்சேனை தனியார் விடுதியில் நடைபெற்றது.

இதில் தொற்றுநோய் கால நீதி மற்றும் சுகாதார உரிமை தொடர்பான மக்கள் ஆணை யத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் நிஹால் மனித எழுச்சி அமைப்பின் இயக்குநருமான கே. நிஹால் அஹமட் ஒருங்கிணைப்பில் சர்வோதய தலைவர் வின்யா ஆரியரட்ன, சிவஞானம் பிரபா கரன், உபுல் விக்கிரமசிங்க ஆகி யோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இதன் போது அனைவருக் கும் சம பங்கு பொறுப்புக்கூறல் மற்றும் ஆரோக்கியத்துக்கான உரிமைகளை உறுதிப்படுத்தல் தொடர்பில் பல்வேறு விளக்க வுரைகள் வழங்கப்பட்டு பங் கேற்பாளர்கள் அனைவரும் கோவிட் -19 மற்றும் பொரு ளாதார நெருக்கடி காலத்தில் உங்களது சுகாதார உரிமைகள் மீறப்பட்டதா? உங்களிடம் மறக்க முடியாத அனுபவம் உள்ளதா? எனும் கருத்துக்களை பொதுவெளியில் பரிமாறிக் கொண்டனர்.

மேலும், தொற்றுநோய் கால நீதி மற்றும் சுகாதார உரி மைகளுக்கான மக்கள் ஆணை யத் திட்டம் அர்ப்பணிப்புடன் செயல்படுவது குறித்தும் கோவிட்-19 தொற்று நோய் மற்றும் பொருளாதார நெருக் கடியின் தாக்கங்கள், குறிப்பாக ஒதுக்கப்பட்ட மற்றும் இலகு வாக பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய மக்களுக்கு சுகாதாரப் பராமரிப்பை அணுகுவதில் உள்ள தாக்கம் பற்றி ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்தல் தொடர்பிலும் சுகாதார நெருக் கடிகளுக்கு அரசாங்கம், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தா பனங்களை அவர்களது கடமை களுக்கு பொறுப்புக்கூற வைத் தல், சுகாதார அணுகல் தொடர் பான முடிவு எடுக்கும் நடை முறைகளில் வெளிப்படைத் தன்மை, சமத்துவம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற் றைக் கோரல், சுகாதாரப் பராமரிப்புக்கான சர்வதேச அணுகலை ஊக்குவிக்கும் கொள்கைகள் மற்றும் ஆரம்ப முயற்சிகளுக்கான அறிவூட்டல், ஒதுக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் சுகாதார கட்டமைப்பில் உள்ள முறை யான சமமின்மையை நிவர்த்தி செய்தல், சமூகங்களின் சுகா தாரத்துக்கான உரிமையை நிலைநாட்டுவதற்கு அவர்க ளுக்கு அதிகாரமளித்தல், முடிவு எடுக்கும் நடைமுறைகளில் அவர்களது குரல் ஓங்கி ஒலிக் கச்செய்தல், சமூக நீதி மற்றும் சுகாதார சமத்துவத்தை முன் னேற்றக்கூடிய கருத்துள்ள கொள்கை மாற்றங்கள் தொடர் பான ஆலோசனைகளை வழங் குதல் ... (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனநாயகத்தை பாதுகாக்க மிகச்சிறந்த நம்பிக்கை கமலா ஹாரிஸ்

## ஜனநாயக கட்சியின் மாநாட்டில் ஜோ பைடன்



சிகாகோ, ஒக. 21

**அமெரிக்க ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான மிகச் சிறந்த நம்பிக்கை கமலா ஹாரிஸ் என ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.**

சிகாகோவில் நேற்று நடைபெற்ற ஜனநாயக கட்சியின் மாநாட்டில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நன்றி ஜோ என்ற கோசங்களுக்கு மத்தியில் ஜோ பைடன் தனது மகள் ஜோ ஆஸ்லேயுடன் மேடையில் தோன்றினார்.

தனது மகள் தன்னை அறிமுகப்படுத்திய பின்னர் கண்ணீருடன் உரையாற்றிய பைடன் நீங்கள் சுதந்திரத்துக்காக வாக்களிக்க தயாரா? அமெரிக்காவுக்கும் ஜனநாயக கட்சிக்கும் வாக்களிக்க தயாரா? கமலா ஹாரிஸையும் டிம் வோல்சினையும் தெரிவு செய்யத் தயாரா என கேள்வி எழுப்பினார்.

நான் ஜனாதிபதி பதவியை நேசிக்கின்றேன். ஆனால், அதனை விட அமெரிக்காவை நேசிக்கின்றேன் என அவர் தெரிவித்த வேளை மாநாட்டில் திரண்டிருந்தவர்கள் நாங்கள் ஜோவை நேசிக்கின்றோம் என கோசம் எழுப்பினர்.

அமெரிக்க பொருளாதாரத்தை வலுப்படுத்தியது, சர்வதேச ரீதியில் அதன் நட்புறவை வலுப்படுத்தியது போன்ற தனது அரசாங்கத்தின் சாதனைகளை பட்டியலிட்ட பைடன் தனக்கு பின்னர் வெள்ளை மாளிகைக்கு கமலா ஹாரிஸை தெரிவு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அமெரிக்காவுக்கு தொடர்ந்தும் பாதிப்பு ஏற்படுத்தி வரும் நிறவெறி வெள்ளை மேலாதிக்கம் போன்றவற்றை சாடியுள்ள பைடன் அவற்றுக்கு அமெரிக்காவில் இடமில்லை எனவும் தெரிவித்தார்.

அமெரிக்காவை தோல்வியடைந்த நாடு என கூறியவர் டொனால்ட் ட்ரம்ப் என்றும்

அமெரிக்காவில் துப்பாக்கி சூட்டால் அதிகரித்த உயிரிழப்புகளை தடுக்க புதிய சட்டம் ஒன்றை கொண்டு வந்தோம் எனவும் பைடன் கூறினார்.


2020ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் தோல்வியடைந்த போது, அவருடைய ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

இதனை சுட்டிக்காட்டிய பைடன், அமெரிக்காவில் அரசியல் வன்முறைக்கு இடமில்லை. வெற்றி பெற்றால் மட்டுமே நீங்கள், நாட்டை நேசிக்கிறேன் என கூற முடியாது.

வளர்ச்சியானது அடைய கூடிய ஒன்று என நான் நம்புகிறேன். நம்முடைய நல்ல நாட்கள் நமக்கு பின்னால் இல்லை. நம் முன்னேயே உள்ளன. ஜனநாயகம் வெற்றி பெற்றுள்ளது. ஜனநாயகம் வழங்கப்பட்டு உள்ளது. அந்த ஜனநாயகம் இனி பாதுகாக்கப்பட வேண்டும்.

தோல்வியடைந்த நாடு என அமெரிக்காவை ட்ரம்ப் கூறினார். பொதுவெளியில் அவர் கூறியிருக்கிறார். உலகத்துக்கு அவர் அனுப்பிய செய்தியை நினைத்து பாருங்கள். அவர் தோல்வி அடைந்தவர்- என்றார்.

(எ)




# வரலாற்று சிறப்புமிக்க தலைமை ஜோ பைடன்

## கமலா ஹாரிஸ் புகழாரம்

சிகாகோ, ஒக. 21

ஜனாதிபதி ஜோ பைடனின் வரலாற்று சிறப்புமிக்க தலைமைக்கும், நம் நாட்டுக்கான வாழ்நாள் சேவைக்கும் நன்றி. நாங்கள் என்றென்றும் உங்களுக்கு கடமைப்பட்டுள்ளோம் என்று ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ் தெரிவித்தார்.

ஜனநாயக கட்சியின் தேசிய மாநாடு சிகாகோ நகரத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. நாளை 22ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டின் முதல் நாள் நிகழ்வுக்கு ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ் திடீரென வருகை தந்தார்.

வழக்கமாக மாநாட்டின் கடைசி நாளில்தான் ஜனாதிபதி வேட்பாளர்கள் உரையாற்றுவார்கள். ஆனால், இந்த முறை யாரும் எதிர்பாராத வகையில் கமலா ஹாரிஸ் முதல் நாளிலேயே மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

“ஜனாதிபதி ஜோ பைடனை கொண்டாடுவதன் மூலம் இந்த உரையை நான் தொடங்க விரும்புகிறேன்.

நம் நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருந்தும், ஒவ்வொரு அடுக்குகளில் இருந்தும் மக்கள் இங்கு குவிந்துள்ளனர். இந்த நவம்பரில் நாங்கள் ஒன்றாக, முன்னேறி வருகிறோம் என்பதை ஒரே குரலில் அறிவிப்போம். நாம் எப்போதும் இதை நினைவில் கொள்வோம். நாம் போராடினால் வெற்றி பெறுவோம் - இவ்வாறு கமலா ஹாரிஸ் கூறினார்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் போட்டியிடும் முக்கிய வேட்பாளர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.(எ)


# இஸ்ரேல்மீது ஆளில்லா விமானம் தாக்குதல்

டெல் அவிவ், ஒக. 21

இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் அடுத்தடுத்து நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் பலியானார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு கடந்த ஆண்டு ஒக்ரோபரில் கொடூரத் தாக்குதல் நடத்தியதில், இஸ்ரேல் மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். பணயக் கைதிகளாக பலர் சிறை பிடித்து செல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் பணயக்



கைதிகளாக பிடித்து செல்லப்பட்டவர்களில் ஒரு சிலரை இஸ்ரேல் மீட்டது. எனினும், காஸாவை இலக்காக கொண்டு இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ)

# எல்லையில் பாதுகாப்பு மண்டலம் உருவாக்குவதே எங்கள் இலக்கு!

## உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உறுதி

மொஸ்கோ, ஒக. 21

ரஷ்யா எல்லையில் பாதுகாப்பு மண்டலம் உருவாக்குவதுதான் எங்கள் இலக்கு என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

உக்ரைன் படைகளின் ஊடுருவலை சற்றும் எதிர்பார்க்காத ரஷ்ய படைகள், தங்கள் சொந்த பிராந்தியத்தை தற்காத்துக் கொள்ளும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளன.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. எனினும் ரஷ்யா தனது இலக்கை அடைய முடியவில்லை. ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு மேற்கத்திய நாடுகள் உதவிகளுடன் உக்ரைன் பதிலடி கொடுத்து வருவதால் போர் நீடிக்கிறது.



இந்த நிலையில் கடந்த 6 ஆம் திகதி திடீரென உக்ரைன் படையினர் எல்லையில் ரஷ்ய பகுதியான குர்ஸ்க் பிராந்தியத்துக்குள் நுழைந்தனர். அங்கு சுமார் 70 குடியிருப்பு பகுதிகளை உக்ரைன் படையினர் சுற்றி வளைத்தனர். மேலும் அந்தப் பகுதியில் உள்ள இரண்டு பாலங்களை தகர்த்து ரஷ்ய படைகளுக்கு அதிர்ச்சி கொடுத்தனர்.

இந்த நிலையில் ரஷ்ய படைகளின் எல்லை தாண்டிய தாக்குதல்களை தடுக்க, ஒரு பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்குவதற்குத்தான் இந்த தாக்குதல் என முதன்முறையாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், “தற்போது ஒட்டுமொத்த தற்காப்பு நடவடிக்கைதான் எங்களது முதன்மையான பணியாகும். முடிந்தவரை ரஷ்ய படைகளின் போர் திறனை அழித்து அதிகபட்ச எதிர்த் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது. உக்ரைனுக்கு எல்லையில் பாதுகாப்பு மண்டலம் தேவை. பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்குவதே எங்கள் இலக்கு” - என்றார்.

(எ)

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கமலாவுக்கு அதிக வெற்றி வாய்ப்பு

## புதிய கருத்துக்கணிப்பில் தகவல்

வாஷிங்டன், ஒக. 21

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கமலா ஹாரிஸுக்கு அதிக வெற்றி வாய்ப்பு உள்ளது என்று புதிய கருத்துக் கணிப்பில் தகவல் வெளியாகியுள்ளது.

உலகம் முழுவதும் ஆவலுடன் எதிர்பார்க்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதியும், இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார். குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் களமிறங்கியுள்ளார்.

இந்த சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வாய்ப்பு யாருக்கு என்பது தொடர்பில் [illegible] பி. சி. நியூஸ், [illegible] நடத்திய புதிய கருத்துக்கணிப்பு வெளியாகியுள்ளது.

இதில் கமலா ஹாரிஸுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் இருப்பது தெரியவந்துள்ளது. அவருக்கு 49 சதவீத ஆதரவும், ட்ரம்புக்கு 45 சதவீத ஆதரவும் இருப்பது கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [illegible] மாதம் பென்சில்வேனியா [illegible] நடந்த தேர்தல் பிரசார பேரணியில் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதால் அவருக்கு ஆதரவு அலை வீசுவதாக கருதப்பட்டது. ஆனால், தற்போது நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் -

கமலா ஹாரிஸின் கை ஓங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயக கட்சியினர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த கருத்துக் கணிப்பு முடிவால் ட்ரம்ப் ஆதரவாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலை ஒழிப்பதற்காகவே தேர்தல் செலவினச் சட்டம்!

## விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

**தேர்தல் காலங்களில் இடம்பெறும் மோசடிகளை தடுப்பதற்காகவே தாம் அமைச்சுப் பதவி வகித்தபோது தேர்தல் செலவீனங்கள் தொடர்பான சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார் என ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

சூரியவெவ பகுதியில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகள் மும்முரமாக இடம்பெற்றுவருகின்றன. தேர்தல் பிரசார பணிகளும் இடம்பெறுகின்றன.

இன்று பிரசாரங்களை பார்க்குமிடத்து அவை தேர்தல் மோசடியாகவே தெரிகின்றது. ஏனெனில் அவற்றில் லஞ்சப் பணம் பயன்படுத்தப்பட்டது.

ஊழல் மோசடிகளில் மூழ்கியுள்ள அரசியல் தலைமைகளே நாட்டின் ஆட்சியாளர்களாக வருகின்றனர். இந்த ஊழல்களை ஒழிப்பதற்காகவே நான் தேர்தல் செலவீன சட்டத்தினை கொண்டுவந்தேன்.

நான் இந்த சட்டமூலத்தை பாராளுமன்றில் முன்வைத்த போது எதிர்க்கட்சியினர் அதற்கு எதிராக செயற்பட்டனர். எனினும் பாரிய சிரமத்துக்கு மத்தியில் நாம் பாராளுமன்றில் சட்டமூலத்தை நிறைவேற்றி னோம். அதன் பின்னர் தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் குறித்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்



டுள்ள விதிமுறைகளே நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன.

தேர்தல் செலவீனங்கள் தொடர்பாக வாக்காளர் ஒருவருக்கு குறைந்த பட்சம் 20 ரூபாவே செலவிடவேண்டும் என நானும் மற்றுமொரு வேட்பாளரும் அண்மையில் தேர்தல் ஆணையாளரிடம் கூறியிருந்தோம்.

ஆனால் தேசிய மக்கள் சக்தி ஐக்கிய மக்கள் சக்தி, பொது ஜன பெரமுன ஆகியன தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு மாத்திரம் 68 லட்சம் ரூபா தேவைப்படுவதாக கூறியிருந்தனர். இவை அவை அனைத்தும் மோசடியானவையே - என்றார். (அ)

# 1.87 மில்லியன் டொலர் கொள்வனவு செய்தது இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, ஓக. 21

இலங்கை மத்திய வங்கி கடந்த ஜூலை மாதத்தில் மாத்திரம் வங்கிகளிடம் இருந்து 121 மில்லியன் அமெரிக்க டொலர்களை கொள்வனவு செய்துள்ளது.

இதன்படி இந்த ஆண்டு மொத்தமாக மத்திய வங்கி, வங்கிகளிடம் இருந்து கொள்வனவு செய்த டொலர்களின் பெறுமதி 1.87 மில்லியன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தையின் டொலர் திரவத் தன்மையை பேணுவதற்காக கடந்த ஜூன் மாதம் மத்திய வங்கி டொலர்களை விற்பனை செய்ய நேர்ந்திருந்தது.

இதன் ஊடாக இலங்கை மத்திய வங்கி வெளிநாடுகளில் அந்தத் தொகையை முதலீடு செய்ய முடிந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கிளப் வசந்த கொலைச் சம்பவம் சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக. 21

கிளப் வசந்த எனப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 10 சந்தேகநபர்களையும் எதிர்வரும் செப்ரெம்பர் 02ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவெல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் நேற்று கடுவலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டபோதே இந்த விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 10 சந்தேகநபர்களும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, ஓக. 21

ஐஸ் போதைப் பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு ஐஸ் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா தலைமையக சிரேஷ்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலொன்றையடுத்து சந்தேக நபரை பரிசோதனை செய்த போது அவர் தங்கியிருந்த அறையிலும் அவரது காற்சட்டைப் பையிலிருந்தும் 13 பைக்கெற்றுகள் அடங்கிய 2590 மில்லி கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 24 வயதுடைய பதுளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர் .

குறித்த சந்தேக நபர் இதற்கு முன்னரும் கொழும்பு புளூமெண்டல் பொலிஸ் நிலையத்தில் இலஞ்ச ஒழிப்புப் பிரிவில் கடமையாற்றியதாகவும் அங்கும் இவ்வாறான தவறான குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டமையால் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டு எச்சரிக்கை வழங்கப்பட்டு நுவரெலியா பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# அரச ஊழியர்களுக்கு 2025 முதல் மாதாந்த கொடுப்பனவு ரூ 25,000!

## ஷெஹான் சேமசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஓக. 21

"எதிர்வரும் ஆண்டு முதல் அரச பணியாளர்களின் மாதாந்த கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப் படவுள்ளதாக" நிதிராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்

தேர்தல் பிரசார பணிகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இன்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் ஷெஹான் சேமசிங்க இதனைத் தெரிவித் தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் பொருளாதார மீட்சிக்கான பயணத்தின் போது அனைத்து தரப்பினரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்தார்.

அப்போது அவர்கள் முன்னிலையாகவில்லை. ஆனால் ஜனாதிபதி பாதகம் ஏற்படாதவாறு பொருளாதார அபிவிருத்தி நோக்கிய பயணத்திற்கு நாட்டை இட்டுச் சென்றுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இன்று அதன் நன்மைகளை மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அரச பணியாளர்களின் சம்பளத்தை அடுத்த ஆண்டு முதல் 25 ஆயிரம் ரூபாவாக கொடுப்பனவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. சிறந்த பொருளாதார முகாமைத்துவம் காரணமாகவே எம்மால் அதனைச் செய்ய முடிந்தது. அநுரவாலும் சஜித்தாலும் இதனைச் செய்யமுடியுமா என நான் கேட்கின்றேன்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அவர்களால் இந்த அளவு அதிகரிக்க முடியுமா? வாழ்க்கைச் செலவை அதிகரிப்பது எமது நோக்கமல்ல. நாம் மக்களுக்கு போலி வாக்குறுதிகளை வழங்கமாட்டோம். தேர்தலை இலக்காகக் கொண்டு நாம் அதனைச் செய்யவில்லை.

நடைமுறையில் செயற்படுத்த இயலுமான விடயங்களையே நாம் கூறுவோம். அடுத்த ஆண்டு வருமான வரி விலக்கு வழங்குவதற்கு நாம் எதிர்ப்பார்த்துள்ளோம். நாட்டின் எதிர் காலத்தை தீர்மானிக்கும் தேர்தலாகவே எதிர் வரும் தேர்தல் இடம்பெறவுள்ளது.

இது தனிநபர் ஒருவரின் வெற்றியை தீர்மானிப்பதல்ல . நாட்டை நெருக்கடிக்கு இட்டுச்செல்லாமல் அபிவிருத்திபாதைக்கு இட்டுச் செல்வதற்கான பயணமாகவே புதிய ஆட்சி அமைய வேண்டும் நெருக்கடியை கண்டு ஓடி ஒழிந்தவர்கள் இன்று ஜனாதிபதியாகும் கனவில் உள்ளனர்- என்றார். (அ)

# பொலிஸாரின் கட்டளையை மீறி சென்ற இளைஞன் விபத்தில் பலி!

கொழும்பு, ஓக. 21

பொலிஸாரின் கட்டளையை மீறி மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற ஒருவர் டிப்பர் மோதி உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளின் ஓட்டுநரும் மற்றும் பின்னால் சென்ற இருவரும் தலைக்கவசம் அணியாமல் வெலிகம்பிட்டியவிலிருந்து கொழும்பு - நீர்கொழும்பு வீதியை நோக்கி பயணித்தபோது, வெலிகம்பிட்டிய சந்திக்கு அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு பொலிஸ் அதிகாரிகள் சமிக்ஞை செய்தனர்.

இதன்போது, பொலிஸாரின் கட்டளையையும் மீறி மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் பிரதான வீதியை நோக்கிச் ஓட்டுநர் செலுத்தியுள்ளார்.

இதன்போது, பின் இலக்கத் தகடு இன்றி பயணித்த மோட்டார் சைக்கிள் நீர்கொழும்பு - கொழும்பு பிரதான வீதியிக்கு பிரவேசித்த நிலையில் நீர்கொழும்பிலிருந்து வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்தை அடுத்து ஏனைய இருவரும் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், விபத்தின் பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த உயிரிழந்தவரின் சகோதரர் உள்ளிட்ட குழுவினர் பொலிஸ் அதிகாரிகளுடன் காரசாரமான வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். (அ)

# வாக்காளர் ஒருவருக்கு 109 ரூபா!

கொழும்பு, ஓக. 21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக ஒரு வாக்காளர் ஒருவருக்கு செலவிடக்கூடிய அதிக பட்ச தொகையை குறிப்பிடும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு வாக்காளருக்கு அதிகபட்சமாக 109 ரூபாய் செலவழிக்க முடியும் என தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையகம் நிர்ணயித்த தொகையை விட அதிகமாக செலவு செய்வது சட்ட விரோத செயல் என்றும் இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆஸ்துமா நோய் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 21

இந்தத் தினங்களில் இளைப்பு நோய் (ஆஸ்துமா) அதிகரித்துள்ளதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக இன்புளுவன்சா நோயாளிகளின் அதிகரிப்பும் பதிவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இருமல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் இருந்தால், இது குழந்தையின் ஆஸ்துமாவாக இருக்கலாம் என்றும் இரண்டாவதாக, வைரஸ் காய்ச்சல் பரவுவதற்கான வாய்ப்பும் உள்ளது என்றும்

இப்போதும் இன்புளுவன்ஸா மற்றும் அதுபோன்ற வைரஸ் காய்ச்சல்கள் பரவி வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறகலயவின்...

இளைஞர்களுக்காக செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் இன்னமும் இருக்கின்றன என்று நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார். (ஐ)

## ரணிலுக்கு...

கொழும்பு - மகரகமவில் நடந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"செல்லும் இடமெல்லாம் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக வருவார் என்ற எதிர்பார்ப்புடன் ஒவ்வொரு இலங்கையரும் ஐக்கிய மக்கள் சக்தியை சுற்றி அணிவகுத்து வருகின்றனர். இன்னும் 34 நாட்களில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றியீட்டுவார் என்பதில் எவருக்கும் சந்தேகம் இல்லை.

சஜித்தின் வெற்றியே நாட்டில் நிலவும் அரசியல் யதார்த்தம் என போட்டிக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கூறுகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அருகில் இருப்பவர்களுக்கும் சஜித் வெற்றி பெறுவார் என்று தெரியும்.

இன்று மக்கள் தமது வீடுகளில் மின்விளக்கை எரிய செய்யும் போதும், தண்ணீர் குழாயைத் திறக்கும்போதும் இரு முறை யோசிக்க வேண்டியுள்ளது. பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையின்றி மகிழ்ச்சியற்ற நிலையில் வாழும் தேசமாக நாம் மாறியுள்ளோம். அதனால் எம். பிகளுக்கு பேரம் பேசி வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியில் ஓர் எம். பிக்கு 100 கோடி ரூபாய் பேரம் பேசப்பட்டுள்ளது." - என்றும் கூறினார். (ஐ)

## மனிதப்...

உறவுகளின் முல்லைத்தீவு மாவட்ட சங்கத்தின் அழைப்பின்பேரில் நேற்று செவ்வாய்க்கிழமை கொக்குத்தொடுவாயில் போராட்டம் நடைபெற்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் உண்மைகள் வெளிக் கொண்டுவரப்பட வேண்டும் - உண்மையை மறைக்கக்கூடாது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களான தமக்கு நீதி வேண்டும் என்று கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள், "உண்மையை மௌனமாக்காதே: கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் சாட்சிகளை அச்சுறுத்தாதே", "கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி: சிறீ லங்கா இராணுவமே பொறுப்புக்கூற வேண்டும்!", "ஓ. எம். பி. ஓர் ஏமாற்று வேலை: காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி இல்லை!", "கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இலங்கை இராணுவத்தின் பங்கை அம்பலப்படுத்துங்கள்", "வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட எமது அன்புக்குரியவர்களை எங்கே கொன்று புதைத்தீர்கள்?" என்ற கோஷங்களை எழுப்பியதுடன், இந்த வாசகங்கள் தாங்கிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், வடக்கு மாகாணத்தை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், சமூக செயல்பாட்டாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் மற்றும் அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

முன்னதாக கடந்த ஜூன் 29ஆம் திகதி கொக்குத்தொடுவாயில் நீர்ப்பாசன குழாய் அமைப்பதற்காக கிடங்கு வெட்டியபோது மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, முல்லைத்தீவு நீதிபதியின் முன்னிலையில் புதைகுழி தோண்டப்பட்டது. 52 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. கடந்த ஜூலை 16ஆம் திகதி நீதிமன்றின் உத்தரவின்படி புதைகுழி மூடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 30 கோடி ரூபாய் நட்டஈடு கோரி கெஹலியவுக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, ஓக. 21

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 11 பேரிடம் 30 கோடி ரூபாய் நட்டஈடு கோரி மூவர் வழக்கு தொடுத்துள்ளனர்.

கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக இருந்தபோது அவரின் பணிப்பின்பேரில் இறக்குமதி செய்யப்பட்ட பிரெட்னிசோலோன் மருந்தால் கண்பார்வையை இழந்த மூவரே இந்த வழக்கை தாக்கல் செய்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில், கெஹலிய ரம்புக்வெல, ஜனக சந்திரகுப்த, தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம், பேராசிரியர் எஸ்.டி. ஜெயரத்ன, மருத்துவர் விஜித் குணசேகர, மருத்துவர் அசேல குணவர்த்தன, மருத்துவர் ரொஹான் எதிரிசிங்க, மருத்துவர் மகேந்திர செனவிரத்ன, யக்கலையை சேர்ந்த சமீ கெமிஸ்ற் லிமிற்றட், இன்டியானா ஒப்தல்மிக்ஸ் எல். எல். எபி. மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த வழக்குகளின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

கடந்த 2023 ஏப்ரல் 5ஆம் திகதி நுவரெலியா பொது மருத்துவமனையில் கண்புரை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட 10 பேர் பார்வை இழந்தனர். தரமற்ற பிரெட்னிசோலோன் மருந்தை இவர்களுக்கு பயன்படுத்த சிபாரிசு வழங்கப்பட்டது. தரமற்ற இந்த மருந்து மூலமாகவே அவர்கள் பார்வையை இழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிறைவேற்றதிகார..

அகற்றப்பட வேண்டும். ஊழல் மோசடிகளை கையாளும் நிறுவனங்களை சுத்தம் செய்ய வேண்டும் - என்றும் கூறினார்.

வரலாற்று சிறப்புமிக்க ருவன்வெலி சாயவில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாட்டில் ஊழல் அரசியல் கலாசாரம் சூழ்ந்துள்ளது. இந்நிலையிலிருந்து விடுபட அனைவரும் சுதந்திரமாகவும் புத்திசாலித்தனமாகவும் செயல்பட்டு கட்சிகளுக்கு அடிமையாகாமல் தேசிய தலைவர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும்.

ஒரே குழு பல்வேறு அரசியல் கட்சிகளை உருவாக்கி மக்களிடம் வந்தாலும் அவர்கள் நாட்டை பற்றியோ, நாட்டின் எதிர்காலத்தை பற்றியோ சிந்திப்பதில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் கதவுகளை திறந்து விட்டதன் மூலம் எந்த ஒரு திருடனும் கட்சியில் சேரும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

முதிர்ச்சியையும் தலைமைத்துவத்தையும் வழங்க முடியாதவர்கள் ஜனாதிபதி வேட்புமனுவுக்கு பொருத்தமானவர்கள் அல்ல. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானவர்கள் ஊழல்வாதிகள் மற்றும் திருடர்கள். எனவே, நிறைவேற்று அதிகாரங்கள் ஒருபோதும் அகற்றப்படக்கூடாது. நிறைவேற்று அதிகாரம் உள்ள இடத்தில் திருடர்கள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் சரியான நபர் வந்து செயல்பட வேண்டும். நிறுவனங்களை சுத்தம் செய்ய வேண்டும்" - என்றார். (ஐ)

## மாகாண...

நிலையியல் குழு இறுதி செய்ததுடன், ஒருமனதாக அங்கீகாரமும் வழங்கியது.

முன்னதாக நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை தொகுதி, விகிதாசார முறைமையில் மாற்றுவதற்கு பாராளுமன்றில் தீர்மானம் இயற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து எல்லை நிர்ணய பிரச்னையால் சட்டமூலம் நிறைவேற்றப்படவில்லை. இதனால், மாகாண சபைகளுக்கான தேர்தல் கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்த முடியவில்லை.

இந்த நிலையில், மாகாண சபைகளுக்கான தேர்தலை பழைய முறையில் அதாவது விகிதாசார முறைமையில் நடத்துவதற்கு சுமந்திரன் எம். பி. தனிநபர் பிரேரணையை சமர்ப்பித்திருந்தார். இது வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது.

சுமந்திரனின் இந்தப் பிரேரணை தொடர்பில் ஆராய்ந்த உயர்நீதிமன்றம் சில பரிந்துரைகளை வழங்கியது. அந்த மாற்றங்கள் செய்யப்பட்ட நகல் வடிவத்தையே நேற்றைய தினம் பாராளுமன்ற நிலையியல் குழுவால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டது. நிலையியல் குழுவின் நேற்றைய கூட்டம் பதில் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நடந்தது. இதில், கோவிந்தன் கருணாகரம், மனோ கணேசன், சுமந்திரன், சுரேன் ராகவன் உள்ளிட்ட 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு. ஆயராக அன்ரன் ரஞ்சித் நியமனம்!



வத்திக்கான், ஓக. 21

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கலாநிதி அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் பாப்பரசர் பிரான்சிஸால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயர் கலாநிதி யோசப் பொன்னையா உடல்நலக் குறைவு காரணமாக ஓய்வு பெற விரும்புவதாக வத்திக்கானுக்கு அறி வித்தார். அவரின் பதவி விலகலை ஏற்று, பாப்பரசர் பிரான்சிஸ் புதிய ஆயரை நியமித்தார் என்று வத்திக்கானின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக நியமிக்கப்பட்ட அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் கொழும்பு மாவட்ட உதவி ஆயராக பதவியில் உள்ளார். 58 வயதான இவர், யாழ்ப்பாணம் - நாரந்தனையை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரணில் ஆதரவு பெரமுனவினர் நேற்று கொழும்பில் கூடினர்!

கொழும்பு, ஓக. 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பில் கூடிப் பேசினர்.

தங்களுக்கான புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்குவது தொடர்பிலேயே அவர்கள் இதன்போது கூடிப் பேசியிருந்தனர். இந்தப் பேச்சில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை கட்சி தலைவராக நியமிக்கவும் உரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நடைபெறும் எந்தவொரு தேர்தலுக்கும் இந்தப் புதிய அரசியல் கட்சியின் மூலம் வேட்பாளர்களை நிறுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் ஆளும் கட்சியின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்த பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இதேநேரம், புதிய அரசியல் கட்சியின் யாப்பு ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டது. இதன்படி, செயல்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வேலுகுமார்...

அங்கிருந்தவர்கள் சமரசம் செய்து வைத்தனர்.

இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் மூலமாக பாராளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்தனர். எனினும், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேலுகுமார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திராவிடர்...

அமிர்தலிங்கம் தந்தை செல்வாவுக்கு பின்னர் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவராக இருந்தார். இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் இணைந்த இவர் 1956 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று எம். பியானார். தந்தை செல்வாவின் தளபதி என்று சிறப்பு பெயரால் அழைக்கப்பட்ட இவர், தந்தை செல்வா தமிழர் விடுதலை கூட்டணியை உருவாக்கிய போது அதில் இணைந்தார்.

1977இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்களை கைப்பற்றி இரண்டாவது பெரிய கட்சி என்ற அந்தஸ்தை பெற்றது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக அவர் பதவிவகித்தார். ஆயுத வழியை நாடிய இளைஞர்களுக்கும் இவருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து 1989 ஜூலை 13ஆம் திகதி அமிர்தலிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாம்...

இலங்கை மக்களின் தெரிவுகளை மதிப்பது குறித்த இந்தியாவின் உறுதிப்பாட்டையும் இரண்டு நாடுகளில் எவர் ஆட்சி செய்தாலும் வலுவான இரு தரப்பு உறவுகளை பேணுவது குறித்த உறுதிப்பாட்டையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கை மக்களே தெரிவு செய்ய வேண்டியவர்கள் - இலங்கை தீர்மானிக்கும் - இலங்கை மக்கள் தீர்மானிக்கும் எதனையும் நாங்கள் மதிப்போம்.

இலங்கை மக்கள் தெரிவுசெய்யும் எந்த அரசாங்கத்துடனும் இணைந்து பணியாற்றுவோம். எங்கள் நட்பு என்பது அனைத்து இலங்கைக்கும் - அனைத்து இலங்கையர்களுக்குமானது.

இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் பாலம் குறித்து கருத்து வெளியிட்ட அவர், இதற்கு சில காலம் எடுக்கும் - இது நீண்ட திட்டம் ஒரிரு வருட திட்டம் இல்லை. எவ்வளவு காலம் நீடிக்கும் என்று கூறமுடியாது 5 அல்லது 6 வருடங்கள் நீடிக்கலாம். இரு தரப்பும் இணைந்து பணியாற்றுவதிலேயே இது தங்கியுள்ளது. இதனை பரஸ்பர இணக்கப்பாடு புரிந்துணர்வுடனேயே முன்னெடுப்போம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நாகபட்டினம் - காங்கேசன்துறை கப்பல்சேவை வாரத்தில் 3 நாள்கள்!

## பயணிகள் வருகை அதிகரித்தால் தினமும் சேவை


யாழ்ப்பாணம், ஓக. 21

**நாகப்பட்டினத்துக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை வாரத்தில் 3 நாட்களுக்கு மட்டுப்படுத் தப்பட்டுள்ளது.**

போதியளவான முன்பதிவு இல்லாமை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சிவகங்கை கப்பல் நிறுவனத்தின் பணிப்பாளர் நிரஞ்சன் நந்த கோபன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதி வரை இந்த நடைமுறை காணப்படும் எனவும், பயணிகள் வருகை அதிகரிப் பின் அடிப்படையில், எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் நாளாந்தம் குறித்த கப்பல் சேவையை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக வும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, வாரத்தில் செவ் வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய மூன்று தினங்களில் மாத்திரமே நாகப்பட்டி னத்துக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை முன்னெடுக்கப்படும் என சிவகங்கை கப்பல் நிறுவனத்தின் பணிப்பாளர் நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்தார். (அ)



# சிறிகொத்தவில் காஸ் சிலிண்டர்!

கொழும்பு, ஓக. 21

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்த வில் இதுவரை காலமும் காட்சிப்படுத்தப்பட்டிருந்த யானைச் சின்னத்துக்கு பதிலாக தற்போது 'காஸ் சிலிண் டர்' சின்னம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கட்சித் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக கட்சி யின் ஸ்தாபக தலைவர் டிஸ்.எஸ் சேனாநாயக்கவின் படம், தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் படத்துடன் இடையில் யானைச் சின்னமும் காணப் பட்டு வந்தது.

யானைச் சின்னம் நிலையானதாக இருந்தது. எனி னும், தற்போது அந்த காஸ் சிலிண்டர் சின்னம் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

யானைச் சின்னம் மறைக்கப்பட்டமை தொடர்பில் ஐ.தே.க ஆதரவாளர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள் ளது எனக் கூறப்படுகின்றது. எனினும், இது தற்காலிக ஏற்பாடு மாத்திரமே என ஐ.தே.க. வட்டாரங்கள் தெரி விக்கின்றன. (அ)

# தற்போது உள்ள சட்டக் கட்டமைப்பு குற்றவாளிகளை பிடிக்கப் போதாது!

## ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 21

குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு நாட்டில் தற்போ துள்ள சட்டக் கட்டமைப்பு போதாது என ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

கொழும்பில் சமூக வலைத்தளங் களில் எழுப்பப் படும் கேள்விகளுக் குப் பதிலளிக்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இத னைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, மேலதிகமாக இருக்கின்ற அரச பணியாளர்க ளுக்குப் பாதிப்பு ஏற்படாதவகை யில் வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் -

நாட்டில் அரச துறையில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தொழிலிலிருந்து அகற்றினால் அவர்களுக்கு வருமானம், பாது காப்பு இல்லாமல் போய்விடும்.

பங்களாதேஷில் நடந்ததைப் போல் போராட்டங்களை முன்னெ டுப்பார்கள். அப்படியொரு நிலைமை ஏற்படக் கூடாது. அவர்களையும் உள்வாங்கிக் கொண்டு நாம் பய ணிக்கவேண்டும். அதற்கான வேலைத்திட்டம் ஒன்று முன்னெ டுக்கப்படும் - என்றார். (அ)

# தாய்ப்பால் புரைக்கேறியதில் மூன்று மாதக் குழந்தை பலி!

## மிருசுவில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 21

மிருசுவில் பகுதியில் தாய்ப்பால் புரைக்கேறியதன் காரணமாக மூன்று மாத பெண் குழந்தையொன்று நேற்றுமுன்தினம் உயிரிழந்தது. குழந்தைக்குத் தாய்ப் பால் கொடுத்துக் கொண்டிருந்தவேளை அது திடீரென மயங்கி விழுந்துள்ளது.

இதனையடுத்து குழந்தை உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போதி லும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த குழந்தையின் மரணம் தொடர்பான பிரேதப் பரிசோதனை சாவகச்சேரி வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அடுத்த மாதம் முதல் வாரத்திலிருந்து வாக்காளர் அட்டைகள் விநியோகம்!

கொழும்பு, ஓக. 21

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு 29 அங்குலம் நீளமானது எனத் தேர்தல்கள் ஆணைக் குழு வின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் அரச அச்சகத்தில் பாதுகாப்புடன் இடம் பெற்று வருவதாகவும், அரச அலுவலகங்களுக்கு அஞ்சல் வாக்குச் சீட்டுகளின் விநியோகம் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப் பிட்டார். அதேநேரம் வாக்காளர் அட்டைகளின் அச்சி டல் பணிகள் இடம்பெற்றுவருவதுடன் அடுத்த மாதம் முதல் வாரத்திலிருந்து வாக்காளர் அட்டைகளை விநி யோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இதன்போது தெரிவித்தார். (அ)

# போதைப்பொருளை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுப்பேன்

## உறுதியளிக்கிறார் சஜித்

கொழும்பு, ஓக. 21



தமது அரசாங்கத்தின் கீழ் சட்டத்தை உரிய வகையில் நடைமுறைப்படுத்தி போதைப் பொருளை முற்றாக ஒழிக்க நட வடிக்கை எடுப்பதாக ஐக்கிய மக் கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மீரிகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போதைப்பொருள் பாடசாலை கட்டமைப்பை ஆதிக்கத்திற்குட்படுத்தி உள்ளது.

அரசாங்கத்திற்குப் புள்ளிகளைப் பெற்றுக் கொள் கின்ற கண்காட்சிக்குரிய வேலைத் திட்டத்திலேயே அரசாங்கம் செயற்படுகின்றது.

நாட்டின் முக்கியஸ்தர்களுடன் போதைப்பொருள் விநியோகஸ்தர்கள் தொடர்பு வைத்திருக்கிறார்கள்.

போதைப் பொருட்களை இல்லாது ஒழிப்பதற்காகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் தமது அரசாங்கத் தின் கீழ் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ)

# சஜித் சகாக்கள் பலர் ரணிலுடன் இணைவர்

## கூறுகிறார் மனுஷ நாணயக்கார

கொழும்பு, ஓக. 21

ஐக்கிய மக்கள் சக்தியின் மேலும் நான்கு அல்லது ஐந்து உறுப்பினர்கள் அடுத்த சில நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையவுள்ளதாக முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவாக மொத்தம் 14 ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஏற்கனவே தமது ஆதரவை வழங்கியுள்ளனர் என அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் தற்போது ஒரே விடயங் களை ஏற்றுக்கொள்பவர்கள் மற்றும் எதிர்ப்பவர்கள் என சமனான குழுவான்று இருப்பதாகவும் முன்னாள் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

வில்பத்து வனப்பகுதியை வெட்டிய ரிஷாத் பதியு தீன் மற்றும் அதனை எதிர்த்த பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை தற்போது ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுள்ளது. பத்திரப்பதிவு மோசடி குறித்து புத்தகங்களை எழுதிய சுஜீவ சேனசிங்க, அதேபோன்று இந்த மோசடியை பகல் கொள்ளை என்று கூறிய டலஸ் அழகப்பெருமவும் கட்சியில் உள்ளனர்.

சூதாட்டத்தால் கிரிக்கெட் நாசமாகிறது என்று கூறிய அர்ஜுன ரணதுங்கவும், சூதாட்டத்தை நடத்தும் திலங்க சுமதிபாலவும் இருக்கிறார்கள். ஆங்கிலம் பேசு வதன் மூலம் கடன்களைப் பெறுவதை விமர்சித்த சம்பிக்க ரணவக்கவும் அதே சமயம் ஆங்கிலத்தில் பேசி கடன் பெற முயற்சிக்கும் சஜித் பிரேமதாஸவும் கட்சி யில் உள்ளனர் - என்றார். (அ)

# மொட்டில் இருந்து மேலும் 17 பேர் ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 21

பொதுஜன பெரமுனவின் குருநாகல் பிரதேச சபை யின் முன்னாள் உறுப்பினர்கள் 17 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்து அவருடன் இணைந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகிலவி ராஜ் காரியவசத்துடனான சந்திப்பின் பின்னர் அவர்கள் இந்த தீர்மானத்தை மேற்கொண்டனர்.

இதன்போது, ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக தம்மை அர்ப்பணிப்பதாக பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய மாவட்ட அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன் தினம் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்றது.

அநுராதபுரம் மாவட்ட அமைப்பாளர்களாக இஷாக் ரஹ்மான் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்க ளான பீ. ஹறிசன், டபிள்யூ. பி. ஏக்கநாயக்க கடிதங் களை பெற்றுக் கொண்டனர்.

அத்துடன், முன்னர் ஜாதிக ஹெல உறுமயவை பிரதி நிதித்துவப்படுத்திய நிஷாந்தஸ்ரீ வர்ணசிங்கவுக்கு ஐ. தே.கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம காலி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் கட்சியின் சிரேஷ்டர்களின் பங்களிப்புடன் 295 பேருக்கு மாவட்ட மற்றும் பிராந்திய அமைப்பாளர் பதவிகள் வழங்கப்பட்டன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.